உ

சிவமயம்.

இரகுவமிசக்

RAGHUVAMSA

கருப்பொருள்.

KARUP PORUL

—— :*: ——

இது

நீதிபதி

ஸ்ரீமான்.

கு. கதிரைவேற்பிள்ளையவர்கள்

விரும்பியவாறே

சுன்னாகம்

KUMARASWAMI PULAVAR

அ. குமாரசுவாமிப்புலவரவர்களால்

எழுதப்பட்டு

க. வேற்பிள்ளையால்

(PUB by) K. VEL PILLAI.

தமது

யாழ்ப்பாணம் Jaffna

விவேகாநந்தயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

——o——

20 cm. கலி; ௫௦௦௨. சார்வரிஞு தைமீ

—— ~~1900~~ 1901

விலை சதம் ௨௫.

SHE. F. L.

சிவமயம்.

உபக்கிரமணிகை.

இரகுவமிசம் என்பது இரகு என்னும் அரசனுடைய மரபினுள்ளார் கதையைக் கூறுங் காப்பியம் என விரியுங் காரணப்பெயர். இதற்கு முதனூலாயுள்ளது வான்மீகராமாயணத்துக்கு வழிநூலாகக் காளிதாச கவிச்சக்கரவர்த்தியாற் செய்யப்பட்ட இரகுவமிசம் என்னுங் காப்பியம் என்பது "வன்றிசைக் காளிதாசன் வடமொழி - தென்றிசைத்தமிழானனி செப்புகேன்". என்னும் இந்நூற் பாயிரத்தால் இனிது புலப்படும். இரகுவமிசம் என்னும் முதனூற் பெயரே இதற்கும் பெயராயிடப்பட்டது. இரகு என்பது பகைக் கடலையுங் கலைக்கடலையுங் கடப்பவன் எனப்பொருள் படுவதொரு காரணப்பெயர்.

இரகுவுற்பத்திப்படலம்.

தெட்டமெய்த் தவப்பயச் செல்வற் கவ்வயின்
மட்டில கலைக்கட றனையும் வாளமர்
முட்டிய பகையையு முடிவு காண்பனென்
றிட்டன ரொருபெய ரிரகு வென்னவே.

லக் - கடத்தல். உ - விகுதி. இலகு என்பது ரல வொற்றுமைபற்றி இரகு என நின்றது. வமிசம் - மரபு. இரகு என்பவன் திலீப மஹாராசனுடைய மகன் என்று இந்நூலிற் சொல்லப்படுவன். வான்மீகராமாயணத்திலே ககுத்தனுடைய மகன் என்று சொல்லப்படுவன்.

வான்மீகராமணராசவமிசவரிசை.

பிரமா.	இச்குவாகு.
மரீசி.	குக்ஷி.
காசிபன்.	விகுக்ஷி.
வைவச்சுவதமநு.	பாணன்.

அநரண்ணியன்.
|
பிரது.
|
திரிசங்கு.
|
துந்துமாரன். (அரிச்சந்திரன்.)
|
யுவநாச்சுவன். (ரோகிதன்.)
|
மாந்தாதா.
|
சுசந்தி.
|
க. துருவசந்தி. உ. பிரசேநசித்து.
|
பரதன்.
|
அசிதன்.
|
சகரன்.
|
அசமஞ்சன்.
|
அஞ்சுமான்.
|
திலீபன்.
|
பகீரதன்.
|

ககுத்தன்.
|
இரகு.
|
கன்மாடபாதன்.
|
சங்கணன்.
|
சுதர்சனன்.
|
அக்கினிவர்ணன்,
|
சீக்கிரகன்.
|
மரு.
|
பிரசுசிருகன்.
|
அம்பரீடன்.
|
நகுடன்.
|
யயாதி.
|
நாபாகன்.
|
அயன்.
|
தசரதன்.
|

தசரதன்பிள்ளைகள் நால்வர் அவர், க. இராமன். உ. பரதன். ங. இலக்குமணன். ச. சத்துருக்கினன் என்பவர்கள்.

இவ்வாறே வான்மீகராமாயண இரகுவமிசங்களன்றிக் கற்கிபுராணம், இலிங்கபுராணம், கூர்மபுராணம் முதலியவைகளும் இந்தச் சூரியவமிச வரிசையிலே சிறிது மாறுபாடுறும். நாமதேயங்களிலே சில பரியாய நாமதேயமாயு மிருத்தல் கூடும்.

இந்நூலிலே திலீப மகாராசன் புத்திரப்பேறின்றிக் காமதேனுவை வழிபட்டுப் புத்திரனாக இரகு என்பவனைப் பெற்றுக்கொண்ட கதையும், இரகுவின் கதையும், இரகுவின் மகனாகிய அயன் கதையும், அயன் மகனாகிய தசரதன் கதையும், தசரதன் மகனாகிய இராமன் கதையும், இராமன் மகனாகிய குசன் கதையும், குசன் மகனாகிய அதிதி கதையும், அதிதி மகனாகிய நிடதன் முதல் அக்கினி வர்ண னீறாயுள்ள அரசர் கதைகளும் விரித்துஞ் சுருக்கியுஞ் சொல்லப்படும்.

இதனை வடமொழியினின்று தென்மொழியிற் பெயர்த்துக் காப்பிய நடையமைய விருத்தயாப்பிற் செய்தவர், யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசியல் புரிந்த பரராசசேகர மஹாராசாவின் மருகரும் மஹா வித்துவானுமாகிய அரசகேசரி என்பவர். இவர், சிந்தாமணி, சூளாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், கலித்தொகை முதலிய தமிழ்நூல்களிலும் வடநூல்களிலும் மிகவல்லவர் என்பது இந்நூலிலே ஆங்காங்குக் காணப்படும் பிரயோகங்களாற் புலப்படுகின்றது. இவரும், இவர் மரபினர் சிலரும் திருநெல்வேலியை யடுத்த ஆழ்வார் திருநகரியிலேயிருந்த இராமாநுசக் கவிராசரிடத்திலே பலநூல்களையும் படித்துக்கொண்டவர்கள் என்றும், இவர்களை இங்கே அனுப்பும் பொருட்டு அங்கே ஒருவருக்கு எழுதிய சீட்டுக்கவியும் அதற்குச் சான்றாகும் என்றும் அக்கவிராசர் பரம்பரையாராயுள்ள இப்பொழுதைக் கவிராசர் சிலர் கூறுவர்.

* சீட்டுக்கவி.

மாசற் றிலக்கணக் கடலினைக் கரைகண்டு
　　வழிகொண்டு மீண்ட சம்பான்
மதுபதி யெனுஞ்சேது பதியையவ தானத்தில்
　　வரிசை விலைமுறி கொண்டவன்
காசிசந் யாகுமரி மட்டுக்கு நிகரிலாக்
　　கவிமதக் களிநல் யானை
கவிஞர்புக ழட்டாவ தானரா மாநுசக்
　　கவிராச னெழுது யோலை
தேசத்தை யுலையாது தற்காத்த வன்மருவு
　　செந்தமிழ் புலைந்த சேனைச்

* இது ஸ்ரீ கவிராசகார்த்திமதிநாதப்பிள்ளையவர்கள் அநுப்பியது.

செந்தில்காத் தவனெனுந் தந்திகாத் தவனைநிகர்
தீரனெதிர் கொண்டுகாண்க
நேசத்தி லீழத் தியாழ்ப்பாண மேவரசை
நிலையுற்ற சேது பதிதான்
நின்பால் விடுத்தனன் சம்பானில் வைத்தவுரை
நிலைபெற வனுப்பு வாயே.

இவரால் இந்நூலிலே தேருந்தோறும் இனிமைபயக்குஞ் சீரியனவாகவும் பலகவிகள் பாடப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் காவியரசக்கிராகிகளாகிய கவிஞர்கள் பாராட்டிக் களிகூர்வர். அவற்றுட் சிலவருமாறு:—

நாட்டுப்படலம்.

இட்ட மெத்திய வெய்யவ ரிடுக்கண்வந் திறுத்தான்
முட்ட வத்தலைப் பகைவரா குவரென முன்னோர்
பட்டுரைத்தன காட்டுமா பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருக்க் களையே.

காவில் வீழவுங் கணத்தலை வணக்கவு நடுக்கம்
மேல வாகவும் விட்டிடா வெந்தொழில் விளைத்தார்
வாலி தாசவே தளர்த்தன வருமையு மறந்தார்
கோல மள்ளரிற் கொடுந்தொழிற் கொடியரு முளரோ.

ஈர்ந்தறுண் பாளை வாய்நின் றிழிதுளி யிணர்த்தா ரேறி
வார்ந்துகே டுறந்து நெக்க வான்கனி மயங்கிச் சால்பு
பேர்ந்துதே னருவி ருலிற் பிறந்துபேர் மறந்த வென்றால்
நேர்ந்தவா றின்ன தென்று நிறுப்பரி தெவர்க்கு மாதோ.

இந்நூலிலே எளிதிற் பொருள் புலப்படாதனவாயிருக்குஞ் செய்யுள்களும் எத்தனையோ பல. சொற்களும் எத்தனையோ பல. சொற்றொடரும் எத்தனையோ பல. அவையெல்லாவற்றுள்ளும் அரிதுணர்தற் பாலனவாகிய சிலகவிகளை மாத்திரம் ஒருங்கு திரட்டியாராய்ந்து சிலகவிகளுக்குப் பதவுரையும், சிலகவிகளுக்குப் பதவுரையோடு விசேடவுரையும், சிலகவிகளுக்குப் பொழிப்புரையும், சிலகவிகளுக்குக் கருத்துரையும், சில

கவிகளுக்குச் சரித்திரமுஞ், சிலகவிகளுக்கு அந்நுவய மாத்திரமும், சிலகவிகளின் அருஞ் சொற் றொடர்க்குப் பொருளுஞ், சிலகவிகளின் அருஞ் சொற்குப் பொருளுமாக ஏறக்குறைய முந்நூறு செய்யுள்கள் பொருள் விளக்கப்பட்டன. இவற்றுள்ளே பல செய்யுள்கள் முதனூலோடாராய்ந்து முடிக்கவும்பட்டன.

சுன்னாகம்,
சார்வரி௵
கார்த்திகை௴

இங்ஙனம்,
☞ அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

சிவமயம்.

இரகுவமிசக்கருப்பொருள்.

———:*:———

காப்பு.

உதையமா வலரி யெண்ணி லுதித்தன வொளியிற்றூய
சிதைவிலா நிலவுச் செக்கர்ச் செவ்வந்தி மெய்யார்தந்த
புதைகொண்மா மதத்த வாம்ப லானனப் புனிதப்பொற்றே
னிதையவா ரிசத்ததாளு லெக்கலை மணவா தெற்கே.

பாயிரம்.

க. அறிய கத்தைவெ லற்புதர்ச் சேரினென்
சிறிய சொற்பொருட் செம்மை பயக்குமால்
பொறிய லர்ப்பகை கொண்டல வோபுனல்
வறிய கற்பனி வாரி யளிப்பதே.

(இ - ள்.) என் சிறிய சொல் - எனது பொருட்சிறுமையையுடைய சொல்லானது,—அகத்தை வெல் அறி அற்புதர் சேரின் - அகங்காரத்தை வென்ற அறிவிலையுடைய பெரியோரைச் சேருமாயின்,—செம்மை பொருள் பயக்கும் - செம்மையான பொருளைக் கொடுக்கும்,—புனல் வறிய கல் பனி வாரி அளிப்பது - முன்னெல்லாம் நீரின்றிக் கிடந்த சந்திரகாந்தக் கல்லானது குளிர்ந்த நீரைக் கொடுப்பது,—பொறியலர்ப்பகை கொண்டு அலவோ - சந்திரனைக் கொண்டன்றோ. எ - று.

அறி - முதனிலைத் தொழிற் பெயர். அகம் என்பதற்கு மனத்திலே தோன்றுங் காமம் குரோதம் முதலிய உட்பகை என்பாருமுளர். தாம் செய்யத்தொடங்கியது ஒருநூலன்றென்பதும், பொருட்சிறுமையோடு வழுநிறைந்த சொற்கோவை என்பதும் போதரச் "சிறியசொல்" என்றார். பொறியலர் - திருமகளுறையும்பூ; தாமரை. அதற்குப்பகை சந்திரன். பகை-பிரிவுடையது. பகு — பகுதி. ஐ - வினைமுதற்பொருள் விகுதி. அல்லவோ - நிச்சயத்தைக் காட்டும் ஒரு குறிப்பு. இது திருட்டாந்தம் என்னும் அலங்காரம். (சு)

———•———

ஆற்றுப்படலம்.

—o—

௨. புணர்ப னிக்கிரி நீரிற் புதைத்தவான்
இணர்ம லர்த்தொடை யிந்திர னெழா
வணர லைப்படு மைந்தன் வருத்தநீ
உணர்தி யென்றறங் குணர்த்துவ போன்றவே.

(இ - ள்.) இமயமலையை மழைநீருள்ளே மறைத்த மேகமானது மேலே பறந்து இந்திரனாற் சிறகு வெட்டப்பட்டுச் சமுத்திரத்திலே விழுந்தமிழ்ந்திய உன் மகனாகிய மைநாகத்தின் வருத்தத்தை நீயும் அநுபவித்தறிந்துகொள்ளென்று அம்மலைக்கு அறிவிப்பதை ஒத்தது. எ - று.

புணர்தல் - பொருந்துதல். இணர் - முகை. தொடை - மாலை. வணர் - வளைவு. அலை - கடல். "ஆழிபெருநீரலையுவாவே" என்பது பிங்கலம். ஈண்டு வருத்தம் என்றது நீருட்கிடந்து குளிரான் மெலிதலை. வான் - எழுவாய். போன்ற - பயனிலை. இது தற்குறிப்பேற்றம் என்னும் அணி.

முன்னொரு காலத்திலே சிறகுடையவைகளாய்ப் பறந்து திரிந்து பலர்க்கும் இடுக்கண் செய்த மலைகளின் சிறகுகளை, இந்திரன் வெட்டும்போது மைநாகமலையும் பறந்து சிறகு வெட்டுண்டு கடலில் விழுந்தது என்னும் புராணகதை இங்கே பொருத்தப்பட்டது. மைநாகம் - மேனையின் பிள்ளை எனப் பொருள்படும் ஒரு தத்திதாந்தபதம். (௩)

௩. தடவரை யெறிந்திட் டாரத் தாருக னூறி வெய்ய
வடவையி னெரிகட் டான வரையிற மடித்து வாரி
விடமென வயிர வன்மா வீட்டுபு செவ்வேள் வென்றிப்
புடைபட விளங்கு வைவேல் போலவும் போயிற் றன்றே.

(இ - ள்.) தட வரை எறிந்திட்டு - வளைவாகிய மூங்கில்களை முரித்தலாலும்,—(விசாலமாகிய கிரவுஞ்சமலையை அழித்தலாலும்),—ஆரம் தாருகல் நூறி - சந்தன மரங்களையும் மலைகளையும் அழித்தலாலும்,—(ஆரம் தாருகன் நூறி - விட்டுணுவாற் செலுத்தப்பட்ட சக்கரத்தை மாலையாகக் கொண்ட தாரகாசுரனை அழித்தலாலும்),—வெய்ய வடவையின் எரிகண் தான வரை இற மடித்து - வெவ்விய ஊழித்தீயைப்போல எரிகின்ற கண்ணையுடைய யானைகள் (அசுரர்களை) அழியும்படி கொல்லுதலாலும்,—வாரி விடம் என வயிரவன்மா வீட்டுபு - அள்ளி விடமாட்டோம் என்று பகையையுடைய சிங்கங்களைக் கொல்லுதலாலும்,—(கடலிற் றோன்றிய நஞ்சு போல வயிரம்பொருந்திய வலிய சூரனாகிய மாமரத்தைக் கொல்லுதலாலும்),—செவ்வேள் வென்றி புடைபட விளங்கு வை வேல் போலவும் போயிற்று - (அந்த நதியானது) முருகக்கடவுளுடைய பக்கத்தில் வெற்றிபொருந்த விளங்குகின்ற கூரிய வேலினைப் போலவுஞ் சென்றது. எ - று.

தட - வளைவு, பெருமை. சல் - மலை. தானவர் - அசுரர். தானவரை-யானை. வயிரவன்மா என்பதற்குச் சூரபன்மா எனக் கொள்ளுதலும் ஒன்று. வைரம் - வீரத்தின்றன்மை. வீரம் எனினுஞ் சூரம் எனினு மொக்கும். இது சிலேடையுவமை என்னும் அணி. (கரு)

நாட்டுப்படலம்.

௪. கயற்பி றங்கின பிறங்கின கண்கள்செங் கமலம்
அயற்பி றங்கின பிறங்கின முகங்களா ரத்தின்
இயற்பி றங்கின பிறங்கின வெண்ணகை யெண்ணில்
வயற்பி றங்கின பிறங்கின மாதரார் வயினும்.

(இ - ள்.) கயல் மீன்களிடத்திலே விளங்கிய தன்மையெல்லாம் கண்களிடத்தும் விளங்கின; தாமரைப் பூக்களிலே விளங்கிய தன்மையெல்லாம் முகங்களிடத்தும் விளங்கின; முத்துக்களிலே விளங்கியதன்மையெல்லாம் பற்களிலும் விளங்கின; ஆராய்வுழி வயலிலே விளங்கிய தன்மைகளெல்லாம் பெண்களிடத்தும் விளங்கின. எ - று.

பிறங்கின - வினைப்பெயர். அயல் - பக்கம். இயல் - தன்மை. இது தொடர்முழுதுவமைஎன்னும் அணி. (கக)

௫. இட்ட மெத்திய வெய்யவ ரிடுக்கண்வந் திறுத்தான்
முட்ட வத்தலைப் பசைவரா குவரென முன்னோர்
பட்டு ரைத்தன காட்டுமா பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக் களையே.

(இ - ள்.) பெரிய சூரியனால் வாட்டப்பட்டு வருந்துகின்ற தாமரை பூவாகிய களைகளானவை தமக்கு மிக்க நண்பையுடைய வெய்யவர் இடுக்கண்வந்த காலத்திலே முழுதும் பசைவராகுவர் என்று முன்னோர் அநுபவித்துச் சொன்னதைப் புலப்படக் காண்பிக்கும். எ - று.

வெய்யவர் - கொடியவர், சூரியர். முட்ட - முழுதும் கட்ட கள் தலை-பிடுங்கப்பட்ட தேனைத் தலையிலுடைய. கொட்டை - பொகுட்டு. இது நிதரிசநம் என்னும் அலங்காரம். (உரு)

௬. ஊன்கொ டுத்திடும் வேற்கணார்க் கொதுங்கிடு மாம்பல்
கான்கொ டுத்திடுங் குவளைநாட் கமலமூ விரண்டும்
வான்கொ டுத்திடு மன்னைய ராறுவரின் வழிபாற்
றேன்கொ டுத்திட முருகனின் வளர்ந்தன செந்நெல்.

(இ - ள்.) செந்நெற் பயிர்களானவை பெண்களுடைய வாய்முதலியவற்றிற்குத் தோல்வியடைந்து ஒதுங்குகின்ற செவ்வாய்பல், வெள்ளாம்

பல், செங்குவளை, வெண்குவளை, செங்கமலம், வெண்கமலம் என்னும் ஆறும் தாராகணம் என்னுந் தாய்மார் அறுவரையும் போலப் பாலாகிய தேனைக்கொடுத்தலால் முருகக்கடவுள் போல வளர்ந்தன. எ - று.

ஊன் கொடுத்திடும் — ஊனையுண்டாக்குகின்ற. கான்கொடுத்திடும் - வாசனையை வீசுகின்ற. இஃது உபமானவலங்காரம். (உஅ)

எ. நாட்டக விலந்தைய நார மீதெலாஞ்
சேட்டளி மாயையஞ் சேடி கொண்டுறீஇ
ஈட்டுக மயிற்றடங் குழற்க ணீண்டலர்
சூட்டுவ வெனச்சினைச செம்ம றூற்றுமால்.

(இ - ள்.) மாயை சேடி - அன்பினையுடைய தோழியானவள்,—ஈண்டு அலர் கொண்டுறீஇ - மிக்க பூக்களைக் கொண்டுவந்து,—ஈடு உகமயில் தடம் குழற்கண் சூட்டுவ என - பெருமையையுடைய பூமிதேவியின் வளர்ந்த கூந்தலிலே சூட்டுவனபோல,—சேடு அளி - பெருமையையுடைய வண்டுகள்,—சினை செம்மல் - இளமரக் காவின் கொம்பர்களிலுள்ள பழம்பூக்களை,—நாட்டகம் இலந்தைய நாரம் மீதெலாம் தூற்றும் - மருதநிலத்திற் குளத்தின்கண்ணுள்ள பாசிகளின் மேலெங்குஞ் சொரியும். எ - று.

நாரம் - பாசி. உகமயில் - பூமியாகியபெண். இஃது உபமானவலங்காரம். அம் சாரியை. (சூ௨)

அ. கான்குழற் குறத்தி நல்லார் கணிமலர் கொள்ளு மோதைக்
கான்கிளைக் காப்புச் செய்தங் கண்டர்நின் றரற்று மோதை
கான்புனக் குறிஞ்சி யெங்குந் தழைத்தலிற் றூழ்விற் கால
வான்கலித் தனவென் றேகை மஞ்ஞைநின் றூலுமன்றே.

(இ - ள்.) குறிஞ்சிநிலப் பெண்கள் புலிபுலி என்று வேங்கைப் பூப்பறித்தற்கணுண்டான ஆரவாரத்தை முல்லைநிலத் திடையர் கேட்டுப் பசுக்களுக்குக் காவல்செய்து ஆவாரிக்கும் ஒலியானது குறிஞ்சிநிலமெங்கும் பாத்தலினாலே அந்நிலத்து மயில்கள் காலமுகில்கள் முழங்கினவென்று சருதிக் கூத்தாடாநிற்கும். எ - று.

கணி - வேங்கை. ஆன் — பசு. அண்டர் - இடையர். புனம் - கொல்லை. வான் - மேகம். இது முல்லையுங் குறிஞ்சியும் தம்முண் மயங்கிய திணைமயக்கம். பூத்திருக்கும் வேங்கைமரம் புலிபோன்றிருத்தலிற் பூப்பறிக்கையிற் பெண்கள் புலிபுலி என்பது அந்நில வழக்கு. மலைபடுகடாத்துரையிலே நச்சினார்க்கினியரும் "வேங்கைப் பூவைச் சூடுதற்கு மகளிர் புலிபுலி என்று கூப்பிடும் வமத்தையுடைய ஆரவாரமும்" என்றார். அதனைக் கேட்ட இடையர் பசுக்களைக் கொன்றுண்ணவரும் புலி எனவும், அவ்விடையருடைய ஆரவாரத்தை மயில்கள் காலமுகிலின் முழக்கெனவும் மயங்கலால் இது பிராந்திமசம் என்னும் அணியுமாம். (௩அ)

௯. கடுப்பொதி நயன வாளிக் குறத்தியர் காயா கண்ணி
தொடுப்பமென் னுகமாறிச் சூடல்புன் னைகஞ் சோரா
தெடுப்பவிக் கார நேர்கொண் டிவவே யார மேறக்
கொடுப்பநற் கண்டில் வெண்ணெய் கொள்வதோ வாவின்
[வெண்ணெய்.

(இ - ள்.) குறிஞ்சிநிலப் பெண்களால் தம்முடைய நிலத்துள்ள காசுப்பூவை நெய்தனிலத்துப் பெண்களுக்கு மாலை தொடுத்தற்குக் கொடுத்துத்தாஞ் சூடுதற்கு அந்நிலத்துள்ள புன்னைமலர்கள் மாறி எடுக்கப்படுகின்றன. பின்னும் அப்பெண்களால் மருதநிலக் கரும்புகளை நிறைய எதிரே பெற்றுக்கொண்டு மூங்கின் முத்துக்கள் கொடுக்கப்படுகின்றன. பின்னும் அவர்களாற் கண்டில் வெண்ணெய் கொடுத்து முல்லைநிலத்துப் பசுவெண்ணெய் கொள்ளப்படுகின்றன. எ - று.

கடு - நஞ்சு. வாளி - அம்பு. ஏற - அதிகமாக. கண்டில்வெண்ணெய்- குறிஞ்சிநிலத்துள்ள ஒரு பூண்டு. குறிஞ்சிநிலம் ஒன்றோடேனைய நெய்தல், மருதம், முல்லை என்பவற்றோடு மயங்கிய திணைமயக்கம். அலங்காரம் மடக்கு என்னுஞ் சொல்லணியோடு கலந்து வந்த பரிவருத்தனம். (௧௦)

—o—

நகரப்படலம்.

௧௦. ஊனை யுருக்குயி ராய தனிப்பெடை யூடாநீ
டீன முறப்பெரு மால்கொடு புட்குல மேபாரா
மான மதிற்பொறி யாய கசத்தினை மாநீரு
டான நவத்தள காகு மெனக்கரை யாறுவே.

(இ - ள்.) பறவைக்கூட்டங்கள் தம்முடைய பெடைகள் ஊடிப் பிரிந்தொழிய அகழிநீருட் டோன்றுகின்ற மதிற்பொறியாகிய பறவையின் நீழலைப் பார்த்து இது நீருள்வாழும் புத்தளகாகு மென்றெண்ணி அவ்வகழிக் கரையை விட்டு நீங்கா. எ - று.

ஊனை உருக்கு உயிராய தனி பேடை - உடம்பையும் உருகச் செய்கின்ற உயிர்போன்ற ஒப்பற்ற பேடை. ஊடுதல் - பிணங்கல். ஈனம் - நீங்குதல். மானம் - பெருமை. மதிற்பொறியாகிய பறவையின் நிழலைப்பெடை என்று ஆண்பறவைகள் மயங்குதலால் இது மயக்கவணி. (௧௮)

௧௧. கார்க்குல மழுந்து மாடங் கணிப்பில வநந்த மோர்காற்
றேர்க்கதிர் தடுக்குஞ் சாலை தெளிக்கலைச் செவ்வி சேரு
நீர்க்கதிர் படுக்குங் சோயி லுலப்பில சோடி நீண்ட
பார்க்கமை தரிக்கு நாகஞ் சுமக்கலாப் பவன மாதோ.

(இ - ள்.) மாடங்கள் அளவில்லாதன; சாலைகளும் அநந்தம்; கோயில்களும உலப்பில்லாதன; பவனங்களுங் கோடி. எ - று.

ஓர் காரதேர்க்கதிர் - சூரியன். நீர்க்கதிர் - சந்திரன். கோடி - ஈண்டுப் பல என்னும் பொருட்டு. டார்க்கமை - பூமியாகியபாரம். பவநம் - கோயில். தொடர்புவுயர்வு நவிற்சி, பின்வருநிலை, உதாத்தம் என்பன கலந்து வந்தமையின்; இது சங்கீரணம் என்னும் அணி. (சரு)

க௨. வெங்கை வேழத் தெதிரெதிர் வீரர்பொற்
தொங்கை வேழ மெதிரக் குலைவரால்
வங்க வேழம் பரப்புவி மேன்மதன்
செங்கை வேழச் செயலல தில்லையே.

(இ - ள்.) யானைக்கு எதிரே எதிர்த்துப் போராடும் வீரர் பெண்களுடைய முலையாகிய யானை எதிர்வர நிலையழிந்து தோல்வியடைவர். மன்மதனுடைய கருப்புவில்லின் செயலல்லது வேறு செயலில்லை. எ-று.

வங்கம் - தோணி. ஏழ் அம்பரம் - எழுகடல். வேழம் - கருப்பு. இது அதிகோத்தியணி. (ருகூ)

---o---

ஆசியபற்படலம்.

க௩. ஓதாடன் மயிலிலமின் றிருவென்னு முவரோகை
வாதாடு மனத்தேனம் பெடையோடு மரீஇமடவார்
காதாடுங் கட்பேடை கவன்றூடச் செந்தேனந்
தாதாடுங் கருந்தேன்க டனியாடு நறுந்தாரான்.

(இ - ள்.) வீரதுர்க்கை பூமிதேவி திருமகள் என்னும் பெண்களுடைய மனமாகிய பெண்வண்டுகளோடு ஏனைப்பெண்களுடைய கண்களாகிய வண்டுகளுங் கலந்து கவலை கொண்டு பிணங்கத் தேன்பொருந்திய தாதுகளை அனுகிற்ற கரிய பெண்வண்டுகள் மாத்திரம் அநுபவிக்கின்ற நறிய மாலையை யுடையவன். எ - று. (கூ)

ஆடன்மயில் - வீரதுர்க்கை. தேன் - வண்டு.

க௪. மறுக்குமே யிவன்கடைக்கண் மலர்சேக்க மன்னர்வயின்
இறுக்குமே யிகலிருள்வல் லிசற்போரி னெதிரேறிச்
செறுக்குமே யிவன்கருணைச் சிந்தைசிறி தேவேறிற்
கறுக்குமேற் சிவக்குமன்னர் மலையேறுங் கழலிணையே.

(இ - ள்.) மறுக்குமே - மறுத்துரையாடுவாரு? மறுத்துரையாடான்,—இவன் கடைக்கண் மலர் சேக்க இகல் இருள் மன்னர்வயின் இறக்குமே - இத்திலீபராசனுடைய கடைக்கண்ணாகிய மலர் சிவக்கப் பகையிருளா

னாதுபகையரசர் மாட்டுத் தங்குமா? தங்காது,—வல் இகல் போரின் எதிரேறி செறுக்குமே - வலிய பகையையுடைய போரிலே எதிர்சென்று நின்று கொல்வானா? கொல்லமாட்டான் (ஏனெனில்),—இவன் கருணை சிந்தை வேறில் சிறிதே கறுக்குமேல் - இவனுடைய கருணை நிறைந்த மனமானது வேறொரு விஷயத்திலே சற்றே கோபிக்குமாயின்,—மன்னர் மலையேறுங் கழலிணை சிவக்கும் - (தம்மேற் கோபிக்கின்றான் என்று தாமே வீழ்ந்திறத்தற்கு ஓடிப்போகும்) பகையரசர் மலையிலேறும பாதங்கள் சிவக்கும்.

ஏகாரங்கள் எதிர்மறை. இருவாய் அசை. இவனுடைய கருணைச் சிந்தையானது தம்மேலன்றி வேறொன்றில் வெகுண்டபோதே மலையேறி வீழ்ந்திறத்தலாற் பகையரசரை மறுத்துச் சொல்லுதலும் எதிர்த்துக் கொல்லுதலும் இவனுக்கு வேண்டாம் கண்சிவத்தல் ஒன்றுமே அமையும் என்பது கருத்து. இவனுடைய அரசியற்பெருமையைப் புகழ்தலால் இது அதியுத்தி என்னும் அணி. (அ)

கரு. நேருமிக னாற்றானை நெடுங்கவரி கவிகையெனச்
சாருமிவற் கலங்காரத் தகைசாரச் சாராவோர்
பேருதவி செயுமன்றே வெனினிவற்குப் பேருதவி
தேருமனு நெறிசேர்வுஞ் சிலைபூண்ட நாணியுமே.

(இ - ள்.) நால் தானை - கரி, பரி, தேர், காலாள் என்னும் நால்வகைச் சேனையும்,—இவற்கு நெடுமை கவரி கவிகை என அலங்காரத் தகை சார சாரும்,—இத்திலீப ராசனுக்கு நெடுமையாகிய சாமரங்களுங் குடைகளும் அலங்காரத்தின்பொருட்டு அமைந்திருத்தல் போல அலங்காரத் தகுதி அடையுமாறு சார்ந்திருக்கும்.—நேரும் இகல் சாரா ஓர் பேருதவி செயுமன்றே எனில் - நேரும் போரில் பகையை அடர்த்துநின்று ஒருபேருதவியைச் செய்யுமல்லவா என்று சொல்லின், செய்வனவல்ல,—தேரும் மனுநெறி சேர்வும் சிலை பூண்ட நாணியும் ஏ பேருதவி - தேர்ந்த மனுநீதியிற் சேர்ந்திருக்கும் புத்தியும் வில்லிற் பூட்டப்பட்ட நாணுமாகிய இரண்டுமே இவனுக்குப் பேருதவி செய்வனவாகும். எ - று.

சாமரையுங் குடையும் போலச் சதுரங்க சேனையும் அலங்காரத்தின் பொருட்டு இவனாற் கொள்ளப்பட்டனவன்றி ஏனையரசர் கொள்வதுபோலப் போரின்பொருட்டுக் கொள்ளப்படவில்லை. இது விசேடம் என்னும் அணி. (கசு)

கசா. ஒடுங்குவன விலகலையி னுளபலங்கண் முன்னையிற்செய்
தடங்குவன வவ்வியலை யறிவிப்ப போலிவற்கு
நடுங்குவன நூதனெறிப்பு மின்மையினா னனியாவை
தொடங்குவன பலத்தல்லாற் பிறிதொன்றுற்றேற்றுவே.

(இ - ள்.) பரந்தநூல்களாற் சொல்லப்படும் பயன்கள் அவற்றின் காரணங்களாய் முற்பிறவியிற் செய்யப்பட்ட வினைகளின் முறையை அறிவி

த்தல் போல இத்திலீபன் தொடங்குங் கருமங்கள் செய்து முற்றியபின்னிகழும் பிரயோசனங்களால் அறியக்கப்படுவன; இவனுக்கு நெற்றி நெறிப்பு முதலிய குறிப்பானிகழும் உறுப்பின் றொழிலும் இன்மையால் வேறொன்றால் அக்கருமங்கள் அறிவிக்கப்படா. எ - று.

அநுபவிக்கும் பிரயோசனங்களாற் பிராரத்த வினைகள் குறிக்கப்படுதல்போல இவன் வினைகளும் பிரயோசனத்தால் அறியப்படுவனவாம். இஃது உவமையணி. (கரு)

—o—

குறைகூறுபடலம்.

கஎ. கிளைக்கடல் வளைவு மாலோன் கிளருடு வளைவு நீதி
கிளைக்குநர் வளைவுந் தன்மச் செழுங்கலை வளைவுஞ்செஞ்சொல்
விளைக்குநர் வளைவுந் தேனு வேட்டவர் வளைவு மேரு
வளைக்கடல வளைவு மற்றை மாகதர் வளைவு மொக்கும்.

(இ - ள்.) கிளைக்கடல் வளைவும் ஆலோன் கிளருடு வளைவும்ஒக்கும். நீதி கிளைக்குநர் வளைவும் செழுங்கலை வளைவும் ஒக்கும். செஞ்சொல் விளைக்குநர் வளைவும் தேனு வேட்டவர் வளைவும் ஒக்கும். கடல்வளைவும் மாகதர் வளைவும் ஒக்கும். எ - று.

கிளைக்கடல் - சுற்றமாகிய கடல். வளைவு - சூழ்ந்துநிற்றல். ஆலோன் - சந்திரன். உடு - நாண்மீன். நீதி கிளைக்குநர் - அமைச்சர். கிளைத்தல் - ஒன்றனைப் பலகாற் பயிறல். மாகதர் - வமிசபரம்பரையைப் புகழ்ந்து பாடுவோர். இது கடைநிலைத் தீபகம் என்னும் அணி. (கசு)

—o—

தேநுவந்தனைப்படலம்.

கஅ. சொற்பிழை கிளிகள் கொள்ளத் துணைச்சிறைத் தும்பிபம்பி
அற்பிழை யலங்கற் கோதை கனிகளா லமைந்து காட்டும்
பிற்பிழை களவிற் காக வெண்ணகை பெரிது காட்டும்
முற்பிழை முகைய கான முல்லைமேன் முடிந்த தன்றே.

(இ - ள்) சொல்லை நினைப்பித்தலாகிய பிழையைக் கிளிகள் அடைய; கூந்தலைப் பழங்களாற் காட்டும் பிற்பிழை களாமரத்திற்காக; பற்களைக் காட்டும் முற்பிழை அரும்பையுடைய முல்லையின்மேலே முடிந்தது. எ - று.

துணைச்சிறை - இரண்டாகிய சிறை. அல்பிழை - இருளைத் தவறுபடச்செய்த. மனைவியை ஆச்சிரமத்திலே நிறுத்தித் தேனுவை வழிபடுதலே விரதமாகக் காட்டிலே வந்த திலீபராசனுக்குக் கிளிகளும், களாமரங்களும், முல்லைக்கொடிகளும் முறையே சொற்களாலும், பழங்களாலும், முகைகளாலும் மனைவியுடைய சொல்லையுங் கூந்தலையும் பற்களையும் நினை

ப்பித்து அவ்விரதத்திற்குப் பங்கஞ் செய்தலாற் பிழைசெய்தன என்க. முற்பிழை - முற்பக்கத் துறப்பைக்காட்டும் பிழை. பிற்பிழைஎன்பதும் அன்னது. இது நினைப்பணி. (சுக)

கசு. அயர்முலைக் கனகிரி மகளி ரஞ்சந
வியர்மதர்க் கண்ணிணை விரகின் மேலவர்
மயர்படச் சூரர மகளிர் சந்தனத்
துயர்மரப் பொதும்பர்புக் கொளியி ருப்பரால்.

(இ - ள்.) மேலுலக வாசிகளாகிய தேவர்கள் மலையரமகளிருடைய கண்களின் பார்வை விசேடத்தால் மயங்க, அதுகண்ட தேவப்பெண்கள் ஐயமுற்று அவ்விருபாலார் களவையும் அறியும்படி சந்தனச் சோலையிற் புகுந்து மறைந்திருப்பர். எ - று.

அயர்முலைக்கனம் - அயர்விக்கின்ற முலைப்பாரம். விரகு - கபடம், உபாயம், வன்மை. மேலவர் - தேவர். சூரரமகளிர் - தேவப்பெண்கள். மலைக்குந் தேவுலகிற்குஞ் சம்பந்தங் கற்பித்தலால் இது தொடர்புநவிற்சியணி. (சுஙு)

உ0. வெருப்பிடித் தூறுறு வண்ண மிக்கவான்
உருப்பிடித் தயல்செலா வொருவன் பார்வையை
விருப்பிடித் ததனிடை விடாதிவ் வெற்பிடைத்
திருப்பிடித் தொருகணஞ் சிறைசெய் திட்டதே.

(இ - ள்.) இமயமலையின் அழகானது அஞ்சி இடையூறடையாதபடி காமதேனுவின் வடிவமொன்றையே பற்றிக்கொண்டு வெறொன்றிலுஞ் செல்லாத திலீபனுடைய கட்பார்வையை அதன்மேற்கொண்ட பற்றினைக்கெடுத்து விடாமற் பிடித்து ஒருகணப்பொழுது வரையுந் தடுத்துக்கொண்டது. எ-று.

திரு - எழுவாய். சிறைசெய்திட்டது - பயனிலை. காமதேனுவைப் பராமுகஞ்செய்து இமயமலையின் அழகினைப் பார்த்துநின்றான் என்பது கருத்து. (எக)

உக. கந்த வேணிக ரிளமையு நறுமலர்க் கணைக்கை
அந்த வேள்பர வழகுமுற் றுடையைநீ டயனார்
தந்த பாருல களிப்புதை நீத்திவண் டந்த
சிந்தை யேதுகொ னீகொலோ கற்றறி சிறியோன்.

(இ - ள்.) முருகக் கடவுளை ஒத்த இளம்பருவத்தையும் மன்மதனைவென்ற அழகினையும் பெற்றிருக்கின்ற நீ பிரமதேவராலே தரப்பட்ட இந்நிலவுலகபரிபாலனத்தை நீக்கி எனக்கு உணவாக உன்னையே தரத்துணிந்த புத்தி எவ்வியல்புடையது? நீதானோ செய்வனவற்றையுந் தவிர்வனவற்றையும் படித்தறிதலிலே மூடனெனப் படுபவன். எ - று.

நின்னிளமையும், அழகும், இராச்சியபரிபாலனத்தோடு இன்பமுறுதற்குரியன என்பதும், பெறுதற்கரியன என்பதும், இப்பசுவாகிய அற்பப்பிரயோசனத்தின் பொருட்டு இழந்துவிடத்தக்கனவல்ல என்பதுந்தோன்றக் "கந்தவேணிகரிளமையும்" எனவும் "அந்தவேள்பரவழகும்" எனவுங் கூறிற்று. இது கருத்துடையடையணி. வசிட்டர் தந்த இந்தப் பசுவொன்றைப் பரிபாலித்தலினும், அவ்வசிட்டரினும் விசிட்டராய் அவர்க்குந் தந்தையாய பிரமதேவர் தந்த பல்லுயிர்களையும் பரிபாலித்தல் செயற்பாலதுஞ் சிறப்புடையதுமாகும் என்பது தோன்ற "அயனுர்தந்த பாருலகளிப்பதை நீத்து" என்றும், ஆதலாற் பசுவைப் பரிபாலித்தல் தவிர்தற்பாலது என்றும், பாருலகைப் பரிபாலித்தல் செய்யற்பாலது என்றும் பகுத்தறிந்திலை என்பதுதோன்றக் "கற்றறி சிறியோன்" எனவுங் கூறிற்று. கற்றறிசிறியோன் என்பதற்குக் கல்லாத மூடன் எனக் குறிப்பாகப் பொருள் கூறுதல் முதனூலொடு முரணும். (௪00)

௨௨. இறத்த னீசெயி னுய்யுமீ தொன்றுமே யவாம்
பிறத்த லாகிய வுயிரெலாந் துயருறல் பெரிதாம்
அறத்து நேரிஃ தாய்ந்துணர் பெரிதம ராடு
மறத்து மாருயி ரடாதுவெங் கண்டிடும் வழக்கோய்.

(இ - ள்.) போராடுகின்ற மறத்துறைக் கண்ணும் உயிர்களைக் கொல்லாமல் உபாயத்தினாற் புறங்கொடுக்கச் செய்யும் வழக்கமுடையவனே நீ இறந்தனையாயின்; இந்தப் பசுவொன்றுமே உய்திபெறும். உடம்பெடுத்த மற்றை உயிர்களெல்லாம் உய்யாமைக்குக் காரணமாகிய இடரடைதல் எவ்வளவோ அதிகமாம். இவற்றுள் நீ இறத்தலோ நீ இறவாது இப்பசுவை இறந்துபோகவிடுதலோ எது செய்யத்தக்க நேர்மையுடையதென்பதனை அறநூல்வழியால் ஆராய்ந்து அறியக்கடவாய். எ - று.

எனக்குணவாக அகப்பட்டுக்கிடக்கும் இப்பசுவொன்றுந் தப்பும்பொருட்டு நீயே எனக்குணவாகி நின்னைத் தற்கொலைசெய்ய நிற்கின்றாய் என்பது தோன்ற "இறத்தனீசெயின்" எனவும், நிலவுலகிலுள்ள பலவகையுயிர்களுங் காவலரில்வழிப் பசி, பிணி, பகை முதலியவைகளாலும், கள்வர், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார் முதலிய கொடியவர்களாலும் அடையுந் துயர்களுக்கு அளவில்லை என்பது தோன்ற "உயிரெலாந் துயருறல் பெரிதாம்" எனவும், பசுக்களை இடரினின்றும் புரத்தல் தருமம் என்னும் பொதுவிதியன்றி ஒருயிரைப் புரத்தற்பொருட்டுப் பல்லுயிர்க்குந் துயர்விளைத்தலுந் தன்னுயிரைத் தானே வதைத்தலும் தக்கனவல்ல என்னும் விசேட விதியை உய்த்துணர்ந்திலை என்பது தோன்ற "அறத்துநேரிஃதாய்ந்துணர்" எனவும், அரசர்க்குச் சாதிதருமமாகிய போர்க்கொலையையுஞ் செய்யாத நினக்குத் தற்கொலை செய்தல் எப்படியுமாகாதென்பது தோன்ற, "பெரிதமராடுமறத்துமாருயிரடாதுவெங்கண்டிடும் வழக்கோய்" எனவுங் கூறிற்று. இஃது இரங்கல் விலக்கு என்னும் அணி. (௪0௧)

உ௩. திரத்து விண்ணவர் நகரினுஞ் சிறந்தொரு திருவின்
வரத்து யர்ந்திடு நகருளாய் வழக்கினா னின்னை
இரத்தும் பல்லுயிர்க கிரங்கிநின் புரத்தினை யினிதே
புரத்த லேகட னென்றிட வென்றியம் புகழோன்.

(இ - ள்.) தேவுலகத்தினுஞ் சிறந்த பலவகைச் செல்வ வரத்திலுயர்ந்த நகரமுடையவனே! இத்துணையும்பேசிய நியாயத்தினானே உடன்படுவாய் என்று நினைந்து உன்னை ஒன்று யாசிக்கின்றேம். பல உயிர்களின்பொருட்டு இரக்கமுற்று அவைகளைக் காத்தற்குச் சாதனமான உன்னுடம்பைக் காத்தலே செய்யக்கடவதென்று கூறத் திலீபராசன். எ - று.

திரம் - நிலை. பசுவைக் காத்தலினால் உடம்பு விடுதல் சுவர்க்கம் புகுதற்குக் காரணம்எனத் திலீபராசன் பின்சொல்வான் என்றெண்ணிச் சுவர்க்கவாழ்வினும் நின் நகரவாழ்வு சிறந்தது; ஆண்டு நீபோதல் வேண்டாம் என்பது போதர "விண்ணவர் நகரினுஞ் சிறந்தொரு திருவின் வரத்துயர்ந்திடு நகருளாய்" என்று கூறிற்று. இது கருத்துடையணி. "ஈண்டரும் போகவின்ப மீறிலதியாண்டுக்கண்டாம் ஆண்டருந துறக்கமஃதே யருமறைத்துணிவுமம்மா" என்றார் கம்பநாடரும். (௪௦௬)

உ௪. கைப்பு ரந்தரு முனதகட் டங்கியும் கனலா
திப்பெ ருந்துய ராவுமுய்ந் திடுமென திசையா
மெய்ப்பு ரந்தனி விளங்குமா செய்துமேல் விளியிப்
பொய்ப்பு ரந்தனை யயிறிநீ யென்றுபின் புகலும்.

(இ - ள்.) சிங்கமே உன்னுடைய உதராக்கினியுஞ் சுவாலித்தெரியாது; (பசியுந் தீரும் என்றபடி) அஃதொன்றோ இந்தப் பெருந்துயரில் அகப்பட்டுக்கிடக்கும் பசுவுந் தப்பிக்கொள்ளும். ஆதலால் என்னுடைய புகழுடம்பை நிலைபெறுத்தி மேலே இறக்கும் இப்பூதவுடம்பை உண்ணக்கடவாய் என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுவான். எ - று.

கைபுரம் தரும் - சிறுமையை உடம்புக்குத் தருகின்ற. இசை - கீர்த்தி. புகழுடம்பு என்றும் நிலைபெறுதலின் மெய்ப்புரம் எனவும், பூதவுடம்பு பின்னினும் நிலையில்லா தழிதலிற் பொய்ப்புரம் என்றுங் கூறினான். இதனை "ஒருவனதிரண்டியாக்கையூன்பயினரம்பின்யாத்த, வுருவமும்புகழுமென்றுங்கவற்றினூழ்காத்தவர்து, மருவியவுருவமங்கேமறைந்துபோமற்றையாக்கை, திருவமர்ந்துலகமேத்தச்சிறந்துபின்னிற்குமன்றே" என்னுஞ் சூளாமணியானுமுணர்க. (௪௦௭)

—o—

இரகுவுற்பத்திப்படலம்.

௨௫. வலியிரா நவ்வியு மடங்க லேறுமொத்
தொலிவிரா யெதிர்ந்துள ரேனு மோர்ந்திடின்
மெலியரோ மெல்லியர் வேற்கை யாடவர்
புலிவிரா யெறிந்திடக் களபம் போக்குவார்.

(இ - ள்.) பெண்கள் வலிமையில்லாத மானையொத்தும் ஆடவர்கள் வலிமையுள்ள சிங்கவேற்றை ஒத்தும் எதிர்ந்தாராயினும் ஆராய்வுழிப் பெண்கள் மென்மையுடையவரல்லர். ஏனெனில்,—ஆடவர் புலியை எறிந்திடப் பெண்கள் அதற்கு எதிராகக் களபத்தை எறிவார்கள். எ - று.

புலி - ஒருமிருகம், நால்வகைச் சாந்துள் ஒன்று. களபம் - முப்பது வயசுடைய யானை, கலவைச்சாந்து. இது சிலேடையோடு கூடிவந்த காவியலிங்கம் என்னும் அலங்காரம். (௨௬)

—o—

யாகப்படலம்.

உரையொடுங் காளையோங்கக் கடாத்தொடு முரவுக் காலின்
புரையொடுஞ்சரற்காலத்தின்பொலிவொடும்பொருந்தாநின்ற
நிரையொடுங் கரியசெய்ய வெண்மைய நெடிய செங்கை
வரையொடுங் கனலியோடு மதியொடுங் கடுத்தான் மன்னன்.

(அந்நுவயம்) உரையொடுங் காளை ஓங்கக்கடாத்தொடு பொருந்தாநின்ற கரிய செங்கை வரையொடும் உரவுக்காலின் புரையொடு பொருந்தாநின்ற செய்ய கனலியோடும் சரற்காலத்தின் பொலிவொடு பொருந்தாநின்ற வெண்மைய மதியோடும் மன்னன் கடுத்தான். என்க.

உரை - கீர்த்தி. காளை - இரகு. கடாம் - மதம். உரவுக்கால் - வலியகாற்று. புரை - பெருமை. செங்கைவரை - யானை. கனலி - நெருப்பு. மன்னன் - பிதாவாகிய திலீபன். கடுத்தான் - ஒத்தான்.

மதத்தினையடைதலால் யானையும், காற்றினையடைதலால் அக்கினியும், சரற்காலத்தையடைதலாற் சந்திரனும் முன்னையினும் மிக்கோங்கி விளங்குதல்போலப் பிதாவாகிய திலீபனும் இரகுவாகிய மகனை யடைதலால் முன்னையினும் மிக்கோங்கி விளங்கினன் என்பது கருத்து. நிரையொடும் என்பது இதன்பொருள் நிரனிறை என்பதைக் குறித்தது.

—o—

திக்குவிசயப்படலம்.

௨எ. காந்தக வெயிறரு கதிரவ வுடைதன்
காந்தக வையினெறி கடிதரு ளெனவே

நாந்தக மிளிர்தரு நெறுவலி நனிசேர்
நாந்தக மதுகொடு சிலர்செரு நணுக.

(இ - ள்.) கதிரவனே உஷாதேவியுடைய நாயகனே வீரசுவர்க்கம் போதற்குக் கவர்வில்லாத வழியைச் சீக்கிரத்திலே தந்தருளென்று வாட்படையையுங் கொண்டு சிலர் போருக்குச் செல்ல. எ - று.

காந்து அக - காந்துதலைத் தன்னிடத்துடைய. உஷா என்பது உடை எனத் தற்பவமாயிற்று. காந்தன் – நாயகன். கவை - கவர்வு. நாம் - அச்சம் நாந்தகம் - வாள். வீரசுவர்க்கஞ் செல்லுவோர் சூரியனுக்கூடாகப் போகவேண்டுதலின் சூரியனை நோக்கி நேரான வழியை அருள்க என்று வேண்டினர். இது வேண்டலணி. (அரு)

அயனெழுச்சிப்படலம்.

உஅ. ஆங்கெதிர் விடிலொன் றுட லங்கையி னுய காலை
வாங்கிடி லொன்றி ரண்டு மந்திரத் ததுவா லாவித்
தீங்கிது செய்யா மோகஞ் செய்திடுஞ் செருவிற் றெவ்வை
ஈங்கிதன் பெயருஞ் சம்மோ கனமென வியம்ப லாமே.

(இ - ள்.) எதிரே விட ஒரு மந்திரமும் வெற்றி கையிற் கூடியபோது வாங்க ஒருமந்திரமுமாக இரண்டு மந்திரமுடையது. உயிரைக் கொல்லாது; பகைவனை மயக்கும். ஆதலால் இதன் பெயருஞ் சம்மோகநம் என்று சொல்லப்படும். எ - று.

சம்மோகநம் - நன்குமயக்குதலுடையது. (கசஅ)

மாலையீட்டுப்படலம்.

உகூ. அடாரிரு ளபர பக்க மதனினு மந்திக் காலத்
திடரின்மா காளன் சென்னி யிளம்பிறை தொழுது வாழ்வோன்
மடநலாள் வதியுமாறு மயன்றனுற் கடையப் பட்ட
சுடரனு னிவனை கண்டா யவந்திக னென்னச் சொன்னாள்.

(இ - ள்.) அபரபக்கத்திலும் அந்திக்காலத்திலே மாகாளேசுவரருடைய சிரசிலிருக்கும் இளம்பிறையைத் தொழுது வாழ்பவன்; தனது மகளாகிய சஞ்ஞையானவள் வெம்மையின்றி வசிக்கும்படி மயனாலே கடையப்பட்ட சூரியனை ஒத்தவன்; இவன் அவந்திதேசராசன் என்றாள். எ - று.

அவந்திமாகாளேச்சுரத்திற்கு அணித்தாக வாழ்பவன் என்பது போதர "மாகாளன் சென்னி யிளம்பிறை தொழுது" என்றாள். அபரபக்கம் - பிற்பக்கம்.

தன் கணவனாகிய சூரியனுடைய வெம்மையைத் தாங்கலாற்றாது வருந்திய மகளின் பொருட்டு மயனானவன் சாகத்தீவிலே சாணைக்கல்லிலே வைத்துச் சூரியனைக் கடைந்து வெம்மையைக் குறைத்து அழகுபெற வாக்கினான் என்னும் மார்க்கண்டேய புராணகதை உபமானத்தை அடுத்துப் புகழ்பொருளுபமை யாக்கிற்று. கண்டாய் - முன்னிலையசை. அவந்திசன் - அவந்திதேசராசன். (௧௯)

௯௦. மாற்று ருக்க மிலாமையின் வாசவன்
ஏற்று ருக்கொடு நின்றிட வேறிநின்
றாற்று ருக்கமி லவ்வசு ரக்குலந்
தோற்று ருக்கமை வாளியிற் றீத்துளான்.

(இ - ள்.) இந்திரனானவன் அரணின் மையினாலே ஓரிடபவடிவங்கொண்டு நிற்க அதன் முரிப்பிலே ஏறிநின்று அசுரக்கூட்டங்களை அம்புகளால் அழித்தவன். எ - று.

மால் - பெருமை. துருக்கம் - அரண். ஆற்ற உருக்கம் இல் - இரக்கஞ்செய்தலில்லாத. தேற உருக்கு - திண்டமாகிய உருக்கு. முன்னொருகாலத்திலே தேவர்க்கும் அசுரர்க்குமிடையே நடந்த போரிலே இந்திரனாகிய இடபத்தின் முரிப்பிலே சூரியவமிசத்து மூன்றாம் அரசனாகிய புரஞ்சயன் ஏறிநின்று போர்செய்து ககுத்தன் என்னும் பெயர் பெற்றான் என்பது புராணகதை. ககுத்தன் - எருத்துத்திமிலிலே நின்றவன். ககுத் - எருத்துத்திமில். ஸ்தன் - நின்றவன். (௨௰)

௯௧. இன்புளோ சையிற்றோய் பைந்தா ரெழிற்புய ரகுகுமாரற்
கன்புளோ ரல்லோ ராய வரசமண் டலங்க ளெல்லாம்
வன்புளே யிராத காலைக் கமலமும் வாவி மேய
துன்புளே யிருந்த வல்லிச் சூழலும் போன்ற வன்றே.

(அந்வயம்) ரகுகுமாரற்கு அன்புள்ளோராய அரசமண்டலங்கள் வாவிமேய வன்புளே இராத காலைக் கமலமும் அல்லோராய அரசமண்டலங்கள் துன்புளே இருந்த அல்லிச் சூழலும் போன்ற. என்க.

இன்புள் - இனியவண்டு. அரசமண்டலம் - அரசர்கூட்டம். அயமகாராசாவுக்கு அன்புள்ளவர்கள் உதயத்திலே மலருந் தாமரைமலர்போல மகிழ்ச்சியும், அவனுக் கன்பில்லாதவர்கள் அப்போது குவியும் அல்லிபோலத் துனபமும் அடைந்தார்கள். என்பது கருத்து. அலங்காரம் - உவமை. (௨௧)

——o——

௯யணைப்படலம்.

௯௨. தானந் துஞ்சுந் தாழ்விலர் காணு துடையாய
பேனந் துஞ்சும் வாரி சுவற்றும் பிழைதீர

மானந் துஞ்சும் மண்மக ளென்ன மலிதூளி
மீனந் துஞ்சும் விண்ணிட மெங்கும் வெளிமூடும்.

(இ - ள்.) உடையின்றி நிற்கும் பூமிதேவியானவள் தேவர்களாற் காணப்படுவாளாயின் மானம் கெடுவாள் என்று கருதி அவளுடைய உடையாகிய கடலை வற்றச்செய்த தன் குற்றம் நீங்கும்படி தூளியானது அத்தேவர்கள் காணாமல் அவர்கட்கும் பூமிக்கும் இடையிலுள்ள ஆகாயவெளியை மூடும். எ - று.

தானம் - தேவுலகம். துஞ்சுதல் - தங்குதல். தாழ்விலர் - உயர்ந்தோர், தேவர். பேனம் - நுரை. இது தற்குறிப்பேற்றம் என்னும் அணி. (௬)

——o——

இந்துமதிபிறப்புநீங்குபடலம்.

கோலவட்டத்துடங் குடையான்றன்மீதுகளபாதிகுவித்துவீசும்
ஆலவட்டத்திளங்காலாற் பயனுனபயனற்றவம்பொன்மேருத்
தூலவட்டக்களபமுலைச்சுந்தரிதன்மேலவீசத்துவக்குமெய்யிற்
தாலவட்டத்துயிருளதாயன்றோநன்மருந்துபயன்றருதருவே.

(இ - ள்.) அயன்மீது வீசும் ஆலவட்டக்காற்றினாற் பயனுண்டாயின; இந்துமதிமீது அதனை வீசுதலாற் பயனில்லாதன வாயின; நல்லமருந்தும உடம்பி லுயிருள்வழியல்லவா பயன்படுவது. எ - று.

களபம் - கலவைச்சாந்து. தூலம் - பருமை. தாலவட்டம் - பூமி. அயன் இந்துமதி என்னும் இருவரும் உணர்வின்றிக் கிடத்தல் பற்றி வீசப்பட்ட ஆலவட்டத்தின் காற்றினால் உயிருடையனாகிய திலிபனுக்கு உணர்ச்சியாகிய பயனுண்டாயிற்று. உயிரிழந்த இந்துமதியிடத்திற் பயனுண்டாகவில்லை என்க. இது வேற்றுப்பொருள்வைப்பென்னும் அணி. (௭)

——o——

தசரதன்சாபமேற்றபடலம்.

௯௪. புன்கட் சூதவா வேட்டையின வாவெறும் பொய்யேற்
றின்கட் பேரவா மாதரா ரவாவிந்த விறைவன்
தன்கட் பட்டவா தழைத்தவா வில்லையெனிற் றவறில்
என்கட் பட்டவா வெய்திடு மனத்திடை யிவற்கே.

(இ - ள்.) சூதாடலில் விருப்பமும், வேட்டையாடலில் விருப்பமும், கள்ளுண்ணலில் விருப்பமும், பெண்களில் விருப்பமும் இந்தத் தசரத சக்கரவர்த்தியிடத்திலே உண்டாயவாறும் தழைத்தவாறு மில்லையாயின்; பின் இவனுக்கு எந்தத்தவறிலே பொருந்தி மனத்தில் விருப்பம் தோன்றும். எ-று.

புன்கண் - துன்பம். இன்கள் - இனியமது. எவர் மனத்தையும் கவருஞ் சூதாடல், கள்ளுண்ணல், பெண்புணர்ச்சி முதலியவற்றின் அவாவின்மை

சொல்லித் தண்டாபூபிகநியாயத்தினுல் மற்றைய துராஸைகளில்லையென்பது சொல்லவேண்டியதல்லை எனச் சாதித்தலால் இது காவியார்த்தாபத்தி என்னும் அலங்காரம். (கூ)

கூ௫. மண்புரந்துள கற்பினு ரிவரொடும் வைகி
விண்புரந்துள கொடையினுன் விளங்கினுன் விளம்பில்
விண்புரந்துளன் சத்திகண் மூன்ருெடும் விளங்கி
மண்புரந்துள னெனிலொக்கு மல்லதென் வகுப்பாம்.

(இ - ள்.) தசரதராசன் கற்புடையர்களாகிய இப்பெண்களோடும் விளக்கமடைந்திருந்தான். இவனுக்கு உவமைசொல்லப் புகின்; இந்திரன் மந்திரசத்தி, உற்சாகசத்தி, பிரபுசத்தி என்னும் மூன்று சத்திகளோடும் பிரகாசமுற்றுப் பூமியைப் பரிபாலித்து அதன்கணிருப்பானுயின்; உவமையாவன் என்று சொல்வதன்றி வேறு எவ்வுமமையைச் சொல்லுவாம்.

புரத்தல் - காத்தல். "சாதன்மங்கையர்கற்பினுக்கோர்மழை" யாதலின், "மண்புரந்துள கற்பினர்" என்றும்.- தேவர்களுக்கு உணவாகிய அவிப்பாகத்தை யாகஞ்செய்து கொடுத்தலால் "விண்புரந்துள கொடையினன்" என்றும் கூறினர். மந்திரசத்தி - ஆலோசனையின் வலிமை. பிரபுசத்தி - அதிகாரவலிமை. உற்சாகசத்தி - முயற்சிவலிமை. இவற்றைப் பரிமேலழகர் அறிவு, பெருமை முயற்சி என்பர். (கஎ)

கூகூ. மரையின் மாநெடு மணிமுடி வளங்கினாக் களித்தான்
வரையின் மாப்பெயர் யாகங்க ளான்முடி மறுத்தான்
தரையின் மேருவை சயத்தம்ப மாயுளோன் தமசை
சரையு நன்னதிக் கரைநிறு வினன்மகத் தம்பம்.

(இ - ள்.) தன்னை வணங்கினுர்க்குச் செல்வத்தையும் மணிமுடியையுங் கொடுத்தான். அசுவமேதயாகங்களிலே முடியைத் தரியாது விலக்கினுன். மேருமலையைச் சயத்தம்பமாகவுடையவன். யாகத்தூணைத் தமசை சரயுஎன்னும் நதிகளின் கரையிலே நிறுத்தினுன். எ - று.

மரையின்மான் - இலக்குமி. வரை - அளவு. சயத்தம்பம் - வெற்றித்தூண். யாகங்களிலே முடிவுவரையும் அரசர்கள் முடிமுதலிய சின்னங்கள் தரித்திருத்தலாகாது என்னும் விதிபற்றி முடியை மறுத்தான். மகம் - யாகம். (சகூ)

சரிப்புடை யிலக்கு வீட்டுஞ் சரத்தொழி றணவா வச்சம்
விரிப்புடை வெகுளித் தன்மை விலங்கிடை விளக்கும் வேவிற்
பரிப்புடை யுடற்கு முண்டே குணமெனிற் பரந்து நோக்கின்
தெரிப்புடை வேட்டத் துண்டே சிலகுணம் சிறப்பின் மிக்காய்.

(இ - ள்.) சரித்தலையுடைய இலக்கினை விழுத்தும் பாணப்பிரயோகப் பயிற்சி வளரும். மிருகங்களிடத்தும் பயம் கோபம் என்னுங் குணங்களை

ளக்கிக் காட்டும். வேர்த்தலினாலே உடம்புக்கும் (தூர்நீர் நீங்கி இலகுவாதலாகிய) குணமுமுண்டேயாயின்; அரசனே வேட்டைத்தொழிலினுஞ் சில விசிட்டகுணங்கள் உண்டு. எ - று.

சரிப்புடையிலக்கு - நிலையில்லாத இலக்கு. பரிப்பு - தரித்தல். நிலையிலிலக்கு விழுத்தும்பயிற்சி, சரீரத்தை இயக்கும் பயிற்சி முதலியன போர்த்தொழிற்கு உபயோகமாதலால் வேட்டைத்தொழிலுங் குணமுடையது என்பது கருத்து. சரிப்புடை என்பதற்கு வழியின்பக்கத்து என உரைப்பாருமுளர். அது முதனூலோடு மாறுபடும். இப்பொருள் முதனூலுட்கண்டது. (௲எ)

திருவவதாரப்படலம்.

௲எ. நில நீரை யல்லதுரு நீண்முகினீ ரெனக்குணங்கட்
கல நீரை யடையாயா யவிகாரத் தனையாதி
அல நீரை யடையாயா யவிகாரத் தனையாகிற்
புல நீர ராரோநின் புணர்மாயை யறிவாரே.

(இ - ள்.) நிலம் நீரை அல்லதரு நீள் முகில் நீர் என — (தான் அடைந்த) நிலத்தின் குணமன்றி வேறுகுணத்தை அடையயாத மிக்க மழைநீரைப்போல,— குணங்கட்கு அலநீரை அடையாயாய் அவிகாரத் தனையாதி - (சிருட்டி முதலியவற்றின்பொருட்டுச் சாத்துவிகம் முதலிய) குணங்களுக்குரிய தன்மையை அடைந்தும் விகாரமில்லாதவராகின்றீர். எ - று.

மற்றைய வெளி. நீர் - குணம். (௪௲)

குசனயோத்திசெல்படலம்.

விடைக்கொள்ளு நடைய காந்தர்ச் சேர்விட நேடி மின்னார்
புடைக்கொள்ளு ஞெகிழம் விம்மப் போதரு மரச வீதி
முடைக்கொள்ளு முதிர வூன்செம் முகக்கொள்ளிகொண்டுநேடி
நடைக்கொள்ளும் விளிவாய்த் தீய நரிக்கண முடைத்து மாதோ.

(இ - ள்.) சோரநாயகரைச் சேரு மிடந்தேடி மங்கையர்கள் அச்சமின்றிச் செல்லுதற்கு இடனாயிருந்த அரசவீதியானது இரத்தம் பொருந்திய இறைச்சியைக் கொள்ளிவாய்ப் பேய் என்னும் விளக்கைக்கொண்டு தேடிச் செல்லும் நரிக்கூட்டங்களை யுடையதாயிற்று. எ - ு.

விடைக்கொள்ளுநடைய - இடபத்தை ஒத்த நடையையுடைய. ஞெகிழம் - சதங்கை. விளிவாய் - குளிறும்வாய். இரவிற் பெண்கடாமும் அஞ்சாது போதற்கு இடனாயிருந்த இராசவீதி இப்போது பேயும் நரியும் பிறவுஞ் சஞ்சரிக்குங் காடாயிற்று என்பது கருத்து. இது பூர்வரூபம் என்னும் அலங்காரம். (௨௲)

பெருக்கிற்றண் கமலக் கானிற் புகுந்துள பிடிக ணளஞ்
செருக்கிற்றுய்ப் பனவாச் செய்த சித்திரக் கரிக ளெல்லாம்
உருக்கிற்கொண் டியற்றி யன்ன வயிரவள் ளுகிராற் சியந்
தருக்கிற்சென் றிடற விண்ட தலையின வான வன்றே.

(இ - ள்.) தாமரைக்காட்டிற் புகுந்துள்ள பிடியானைகளாற் கொடுக்கப்பட்ட நாளத்தை உண்பனவாகச் சித்திரிக்கப்பட்ட களிற்றியானைகளெல்லாம் சிங்கங்கள் நகங்களா லிடறத் தலையுடைந்தனவாயின. எ - று.

பெருக்கு - வெள்ளம். செருக்கு - களிப்பு. இது மயக்கவணியோடு சலந்து வந்த பூர்வரூபம் என்னும் அணி. அரசமாளிகையுஞ் சிங்கம் வசிக்குங் காடாயிற்று என்பது கருத்து. (உரு)

கொல்லிப்பா வையினற் றுரு வமைத்தமென் குறுநு சுப்பு
வல்லிப்பா வையின்மென் கொங்கை மலைக்கெலாம் வடகமாக
எல்லிப்பா யிருளவன்ன நிறத்ததா யெழப்பல் லூடு
கல்லிப்பாய் விடவரரவி னுரிகளே கலந்த வன்றே.

(இ - ள்.) கொல்லிப்பாவைபோல மரத்தினுற் பெண்வடிவமாகச் செய்யப்பட்ட பிரதிமையின் முலையாகிய மலைக்கெல்லாம் உத்தரீயமாகப் பாம்புத்தோல்கள் அமைந்தன. எ - று.

கொல்லிப்பாவை - கொல்லிமலையிலிருந்து காட்சியினுல் உயிரை மயக்கும்பாவை. தாரு - மரம். நுசுப்பு - இடை. வல்லி — கொடி. எல்லி - இரவு. விடம் - நஞ்சு. வடகம் - உத்தரீயம். உரி - தோல். அது பாம்புகளுக்கும் உறைவிடமாயிற்று என்பது கருத்து. அலங்காரம் - பூர்வரூபம். (உசு)

சக. பாரின் மன்னதே
மேரு வன்னதே
பேரு மன்னதேற்
றேரு மன்னதே.

(இ - ள்.) அத்தேரானது பூமியிலே நிலைபெறுதலுடையது. அதனுல் மேருமலையை ஒக்குமா? அம்மேருமலையும் புடைபெயருமாயின்; அத்தேரும் அம் மேருமலையை ஒப்பதாகும். எ - று.

பேர்தல் - புடைபெயர்தல். இது வேற்றுமை என்னும்அணி. (ருசு)

———o———

வாகுவலயப்படலம்.

திக்கெட்டும் வென்றேற் கைந்தாம் பேரனுந் திருவி னுனும்
தக்கற்கு மனைய னை குமுதனுஞ் சிறந்து தம்மின்

மிக்குற்ற பெரிய சுற்றத் தொடர்ச்சியின் விழுமிதாகப்
புக்கொத்த சிறப்பி னோடு பொருந்துபு பொலிந்து நின்றார்.

(இ - ள்.) அதிதியும் குமுதனும் பெரிய சுற்றத்தொடர்ச்சியினால் வந்தசிறப்பினோடும் பொலிந்து நின்றார். எ - று.

திக்கெட்டும் வென்றோன் - இரகு. அவனுக்கு ஐந்தாம் வழித்தோன்றல் - அதிதி. தக்ககன் என்னும் பாம்புக்குக் குமுதனும் அப்படியே ஐந்தாம்வழித்தோன்றல். (௪௯௨)

——o——

முடிசூட்டுப்படலம்.

கள்ளார் மலர்க்குமுதஞ் செய்யமணிக் கருங்குவளை கரியகாமர்
எள்ளா விழைசிறிய கழைபெரிய வென்னுமே யிலங்கு வாயுந்
தள்ளா வரிவிழியுஞ் சிற்றிடையும் பெருந்தோளுந் தம்மைமாறி
உள்ளா வுரைப்போருக் குரையாக வுவைசிறப்ப வுயங்கி னாளே.

(இ - ள்.) வாய்கள் சிவப்புடையன வல்ல; குமுதப்பூவே சிவப்புடையன. கண்கள் கரியனவல்ல; குவளைப்பூக்களே கரியன. இடை சிறியதன்று; நூலே சிறியது. தோள்கள் பெரியனவல்ல; மூங்கிலே பெரியன. என்று மாறிக் கூறும்படி வருந்தினாள். எ - று.

கருப்பதாரணத்தினாலே வாய் வெளுத்தும் கண் பசந்தும் இடை பெருத்தும் தோள் சிறுத்தும் முன்னர் உவமையாகாது குறைவடைந்த ஆம்பற்பூ, குவளைப்பூ, நூல், மூங்கில் என்பவற்றிற்குச் சிறப்பைக் கொடுத்தன. (௨)

எற்றா னெடுவான ரவிமரபும் பாதாளத் திருந்த மாட்சிச்
சொற்றாள் பணிமரபு நடுவிளங்க வெம்மரபுந் தோற்ற மாகக்
கற்றா ருளத்தறிவு வைகறையிற் பெரிதாகக் காசி றேற்றம்
பெற்றாங் கருந்தகைமைப் பெற்றியினா லொருசிறுவற் பெற்றா
[ளன்றே.

(இ - ள்.) எம்முறைகளையும் விளக்கமாகக் கற்றவருடைய மனத்தில் அறிவானது விடியற் காலத்திலே பெரிதாக நன்கு தெளிவடைந்தாற் போல ஆகாயத்துள்ள சூரியனுடைய மரபும், பாதாலத்துள்ள சர்ப்பராசன் மரபும் நடுவிலுள்ள பூமியிலே விளங்க ஒரு குமாரனைப் பெற்றாள். எ - று.

எல் - ஒளி. சொல் - புகழ். அப்புதல்வன் தாயுடைய சர்ப்பவமிசத்தையும் பிதாவுடைய சூரியவமிசத்தையும் விளக்கத்தக்க பிரதாபவானென்பதுகருத்து. விளக்க ஒருசிறுவற்பெற்றாள் எனவியையும். அலங்காரம் உவமை. (௩)

௪௫. பாரினைக் குசனிவன் பரித்த போதெதிர்
காரின்முன் பின்னரிற் கலிக்கு நன்னதி

நீருறப் பெருகுபு வளனி ரந்தபோற்
சீரினிற் சனங்களுஞ் சிறந்த வென்பவே.

(இ - ள்.) பூமியைப் பிரசாவாகிய குசன் பரிபாலனஞ் செய்தபோது கார்ப்பருவமாகிய ஆவணி புரட்டாசிகளுள் முன்னையதாகிய ஆவணிமாசத்திலே நதி பெருக வளம் நிறைந்தமைபோலவும் மகனாகிய இவன் பரிபாலனஞ் செய்யும்போது பின்னையதாகிய புரட்டாசிமாசத்திலே நதி பெருக வளம் நிறைந்தமைபோலவுஞ் சனங்களுஞ் சிறப்படைந்தன. எ - று.

ஆவணிமாசத்தினின்றும் புரட்டாசி மாசத்திலே நதிப்பெருக்கினால் வளச்செழிப்புப் படிப்படி அதிகமாதல் போலப் பிரசாவாகிய குசனுடைய பரிபாலனத்தினின்றும் மகனாகிய இவனுடைய பரிபாலனத்திலே படிப்படி சனங்களும் மிகச்சிறப்பை அடைந்தன என்பது கருத்து. இது மேன்மேலுயர்ச்சியணி. கார் - கார்ப்பருவம். காரின்முன் - கார்ப்பருவத்திலே முன்னுள்ளதாகிய ஆவணி. காரின்பின் - புரட்டாசி. கலித்தல் - ஒலித்தல். (௪௰௬)

௪௭. அநித்தியப் பகையல்ல பகையென் றுங்கிரண்
டநித்தியப் பகைபுறம் பல்ல வுள்ளவால்
அநித்தியப் பகையின்மு னறுத்திட் டானரோ
அநித்தியப் பகையல்ல பகையொ ராறுமே.

(இ - ள்) அநித்தியப்பகை அல்லபகை என்று இரண்டு - அநித்தியப்பகையென்றும் நித்தியப்பகை என்றும் இரண்டு பகைகள் உள,—அநித்தியப்பகை புறம்பு - அவற்றுள், அநித்தியப்பகை புறத்துள்ளது,—அல்ல உள்ளவால் - நித்தியப்பகை அகத்திலுள்ளது,—அநித்தியப்பகையல்ல பகை ஒராறும் - அநித்தியப்பகையல்லனவாகிய காமம் குரோதம் முதலிய நித்தியப்பகை யாறினையும்,—அநித்தியப் பகையின்முன் அறுத்திட்டான் - அநித்தியப்பகையைக் களைதற்கு முன்னே களைந்து நீக்கினான். எ - று.

ஒருகாலத்துக் கோபமாதலும் ஒருகாலத்து நட்பாதலும் பற்றிப் பகையரசரை அநித்தியப்பகை என்றும், எப்பொழுதும் பகையாதல் பற்றிக் காமம் குரோதம் முதலிய உட்பகைகளை நித்தியப்பகை என்றுங் கூறினர். புறப்பகையாகிய அரசரை வெல்லுமுன் உட்பகையை வென்றான் என்பது கருத்து. (௪௰௭)

குலமுறைப்படலம்.

௪௮. பாடற் புண்டரி கத்தசெம் பதுமமேந் தியகைக்
கோடற் புண்டரி கத்திசே ரிவன்றருங் குரிசில்
நீடற் புண்டரி கத்துரி யானுடை நிலைத்த
ஆடற் புண்டரி கத்தைநே ராயபுண் டரிகன்.

(இ - ள்.) செந்தாமரைமலரை ஏந்திய கையாகிய காந்தளையுடைய இலக்குமி சேரப்பெற்ற இவன் மகன் யாரென்னில்; புலித்தோலைத் தரித்த

சிவனுக்கு உடையாகிய தோலிலே நிலைபெற்ற புண்டரீகம் என்னும் யானைக்குச் சமமான புண்டரிகன் என்பவன். எ - று.

பாடற்புண்டரீகம் - வண்டு. கோடல் - காந்தள். புண்டரீகத்துடையான் - சிவன். ஆடல் - போர். (௩)

தேசிவன் சிறிது கொல்லோ தந்தைவீற் றிருந்த செம்பொன்
ஆசனஞ் சிறிது கொல்லோ வமர்ந்தகத் திருந்த போதில்
தேசிவன் மணிக்கா லுள்ளே வவ்வுபு சிறந்த செம்பொ
னாசனப் புறம்பு பாய்ந்த வம்மகொ லறிகி லேமே.

(இ - ள்.) அமர்ந்து அகத்திருந்த போதில் - பொருந்திச் சிங்காசனத்தினுள்ளே இருந்தபோது,—இவன் தேசு - இவனுடைய இராசகாந்தியானது,—மணிக்கால் உள்ளே வவ்வு சிறந்த செம்பொன் ஆசனப்புறம்பு பாய்ந்தது - இவனுடைய அழகிய காலை உள்ளே அடக்கிச் சிறப்புற்ற செம்பொன் மயமாய ஆசனத்தின் புறத்தே பாய்ந்தது,—இவன் தேசு சிறிது சொல்லோ - இவனுடைய காந்தியானது அற்பமானதோ,—தந்தை வீற்றிருந்த செம்பொன் ஆசனஞ் சிறிது கொல்லோ – இவன் பிதா வீற்றிருந்த செம்பொனாசனமுஞ் சிறியதோ,—அம்மகொல் அறிகிலேமே - அம்மம்ம அறியேம். எ - று.

சிங்காசனத்திலே இருக்கும்போது கால்கள் புறத்தே தூங்காது உள்ளேயடங்கும் அத்துணைச் சிறுவயசினனாயினும் இராசாவுக்குரிய பிரதாபமுடையவன் என்பது கருத்து. இது ஐயவதிசயம் என்னுமணி (உ௩)

——o——

அருஞ்சொற்பொருள்கோள்,

அஃகுதல் - சுருங்குதல். "அஃகா நின்ற பெருநதிகள்" (திக்கு. கச)

அகம் - பாவம். (தேனு. சஉ)

அச்சம் - அரத்தி. (மாலை. சஅ)

அம்மம் - முலை. (நாட். சஉ)

அமலை - ஒலி. "ஆங்குழுமபலையால்" (நாட். கூஉ)

அரம் - பாதலம். (யாக. சுக)

அராபதம் - வண்டு. (நாட். கஎ)

அரிட்டம் - காகம். "எங்குஞ்சகாவரிட்டவிரக்கமே" (திக்கு. சஅரு)

அருப்பம் - மா. "அருப்பமாகிலவருங்கதிர்" (நாட். கூஉ)

அல்லியம் - விட்டுணுவின் கூத்துக்களுள் ஒன்று. இது கஞ்சனால் வஞ்சகமாய் அனுப்பப்பட்ட யானைக்கொம்பினை முரிக்கும் பொருட்டு ஆடியது. "அல்லியநடஞ்செயுமவன்" (மாலை. கூஎ)

அலந்தலை - துன்பம். "உற்றுமன்னவரலந்தலையுறுவதையோரா" (மீட்சி. அகூ)

அலந்தை - குளம். "படிகவகத்தவலந்தையின்வாய்" (மாலை. சஅ)

அலரி - சூரியன்.

அவல் - பள்ளம். "தரமிட்டங்கவலுயர்த்துநாடு" (குல. சகூ)

அளகு - பறவைப்பேடை. (நாட். சஅ) தொல்காப்பியர் "கோழிகூகையாயிரண்டல்லவைசூழுங்காலையளகெனலமையா" என்றாரேனும் இங்கே அன்னப்பெடையையும, "அளகைநேடிப்பார்வல்வந்து" எனக் கந்தபுராணத்திலே பொதுவாகப் பறவைப் பெடையையும் உணர்த்துதலால் அளகு என்பது பறவைப்பெடைக்கெல்லாம் பொதுப்பெயர் என்க.

அனல் - இடி. (ஆற்று. ச)

ஆக்கிநேயம் - அக்கினிபாணம். இது அக்கினி என்பதனோடு எய என்னும் விகுதிபுணர்ந்து முடிந்த ஒரு தத்திதாந்தபதம். "பொய்யறமாக்கினேயமவித்த" (மீட்சி கூஎ)

ஆம்பல் - யானை. "ஆம்பலானனப் புனிதப்பொற்றேன்"

ஆர்பதம் - வண்டு. (இரகுசதி. சக)

ஆரை - மதில். (நகர. உo)

ஆல் - நஞ்சு. "ஆலொக்குஞ்சில கங்காள வரனொக்குஞ்சில" (யாக. எக) அம் கெட்டது.

ஆளாநம் - யானைகட்டுந் தூண். (குறை. ருரு)

இமவம்பு - பனிநீர். (இமம் - பனி. அம்பு - நீர்.) (நகர. எக.)

இரவி - மலை. (இரகு. உரு)

இராகவன் - இராமன். இது, இரகுவின் மரபிற் பிறந்தவன் எனப் பொருள்படும் ஒரு தத்திதாந்தபதம்.

இராமம் - அழகு. (தேனு. கஎ)

இராமன் - தசரதச் சக்கரவர்த்தியுடைய மூத்தகுமாரன். இது அழகன் என்னும் பொருட்டு.

இராவணன் - விச்சிரவசு என்னும் முனிவருக்குக் கைகசி என்னும் அரக்கியிடத்திற் பிறந்து இலங்கையையரசுசெய்தவோரரக்கன். கயிலைமலையிலகப்பட்டபோது அழுதகாரணம் பற்றி இராவணன் என்னும் பெயர் பெற்றான். ! இராவணம் - அழுதல். என்பது பிங்கலம். இது

கம்பநாடர் இராமாயணத்திலே "பண்டைத்தன்னுமத்தின் காரணத்தைப் பாரித்தான்" என்றதனாலும் புலப்படும்.

இலக்குமணன் - தசரதச்சக்கரவர்த்தி புத்திரருள் ஒருவன். செல்வன் என்பது பொருள்.

இலஞ்சை - குளம். "நாட்டகவிலஞ்சைய நாரமீதெலாம்"(நாட் சஉ)

இலாஞ்சனை - அடையாளம். (திக்கு

இறுதிவேள்வி - அந்தியேட்டி. (அவதார. சச)

இறைவை - ஏணி. "ஏறுதற்கமைந்த தோற்றத் திறைவையின" (யாக. க0௯)

ஈதி - அதிகமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்பவைகளால் நாட்டுக்கு வருங்கேடு. "ஈதிவாதையுங் கையகன்றன" (தசரத. கூ)

ஈழம் - பொன். (நகர. கூஅ)

உசாக்கையர் - உசாத்துணைவர். (அயனுத. கஉ)

உடு - அம்பு. (மீட்சி. ரு0)

உத்தரி - குதிரை. (திக்கு. சநகூ)

உதி - வித்தை. "உதியொரேழிரண்டுந்தந்தமுனிவ" (அயனுதய. சகூ)

உதீசி - வடக்கு. (முடி. கூச)

உபேந்திரன் - விட்டுணு. (யாக. கூ0) இந்திரனுக்குத் தம்பியாக வாமனவதாரத்திலே காசிபனுக்கும் அதிதிக்கும் மகனாய் அவதரித்தமைபற்றி உபேந்திரன் எனப்பட்டார்.

உப்பு - கடல். (திக்கு. கஉரு)

உய்யலில்முல்லை - சற்பு. (கடி. கூ0)

உரகநகர் - நாகபுரம். (மாலை. ச0ச)

உரம் - மனம். "உரமலரின்ன லாழியுட்புதையூறுதிர." (குறை. சகூ)

உரு - அச்சம். (தேனு. அரு)

உலோகிதம் - சிவப்பு. (திக். உகூச)

உளை - மயிர். "உளைபசுங்கொடியின் வீக்கி" (தேனு. கூச)

உன்னி - குதிரை. "உன்னிவாய்ப் பொன்சறித்திட" (நகர. ருக)

எண் - எண்ணம். "எண்பொய்த்தவேமச்சென" (நகர. கஎ)

எல்லரி - கைம்மணி. (திச். சரு)

எதி - படை (திக். கூரு)

ஒப்பனை - அலங்காரம். "ஆகாய்த்துக்கொப்பனைக்குரியகோலம்" (தேனு. சஉஉ)

ஒல்லை - பழமை. (இரகு. கூ)

ஒலியல் - யாறு. (வாகு. அக)

ஒளியிருத்தல் - மறைந்திருத்தல். "இடைநெறியதிந்தயலொளியிருந்திடுவார்" (தசரத. ருகூ)

ஒளிவட்டம் - கண்ணாடி. (குசன். சஎ.)

ஒற்கம் - வறுமை. (நகர. கூகூ

ஒற்று - வேய். (குறை. சஉ)

ஓதிமம் - மலை. (நகர. சஎ

ஓரி - நரி. குசன். கூ0)

கங்கவி - பருந்துப்பறவை. "சங்கவிப்படாநிழலுமின்றே" (மீட்சி. சஅ)

கங்கையாரியன் — பரராசசேகரன்.

கடாமலை - யானை. (திக். கச0)

கடிகைமாக்கள் - நாழிகை யறிவிப்போர். (அயனு. சஉக)

கடிப்பிணை - காதணி. (குறை. அ)

கடுவாய் - ஒருவகைப்புலி. (தசரத. கூஉ)

கடையுவா - பூரணை. (மீட்சி. ச)

கத்தணம் - சட்டை. (மீட்சி. எ)

கந்தசாரம் - பனிநீர். (இரகு. உச)

கர்க்கசம் - காடின்னியமான அர்த்தமுடையது. (பாயி. எ.)

கரிமுகவோடம் - யானைமுகவோடம். (வாகு. கூக) சிலப்பதிகாரகாரரும் "பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியும்" என்றார்.

கருள் - கருமை. (நகர. உரு)

சல்லோலம் - நீர்த்திரை. (நகர. ௧௪)
சவ்வை - துன்பம். (இரகு. ௩௧)
கவேரகன்னி - காவேரி நதி. "கங்கையிற் கொணர்ந்ததுங் கவேரகன்னிநந்ததும்" (முடி, ௪௭,)
கழங்கு - கழற்காய். (ஆற்று. ௭.)
கற்பம் - தேவுலகம். (திக். ௪௧௫)
கன்று - வளையல். (நாட். ௫௩)
காகுத்தன் - ௧. விட்டுணு, ௨. ககுத்தன்மரபிற் பிறந்தோன். ககுத்தன்-சூரியவமிசத்து மூன்றுமரசனாகிய புரஞ்சயன். ககுத்தன் மரபிலுள்ளான் எனப் பொருள்படுந் தத்திதம். (மாலை. ௧௧௨.)
காங்கேயம் - பொன். (திக்கு. ௧௮௬)
காப்பு - விபூதி. (நாட். ௬) காரான் - எருமை. (ஆற்று - ௨௨)
கானல் - ஒளி. (நகர. ௫௰)
குச்சரி - குறிஞ்சியாழ்த்திறவகையுளொன்று. (தேனு. ௨௫)
குந்தம் - குதிரை. (திக்கு. ௧௬௬)
குமரம் - கொம்பிலா விலங்கு. (தசரத. ௯௰)
குயம் - அரிவாள். (நாட். ௯௰)
குருகு - கொல்லுலை மூக்கு. (வாகு. ௧௫)
குலம் - கோயில். (நகர. ௪௬)
குலை - வரம்பு. (நாட். ௪௪)
குவால் - கூட்டம் (குறை. ௭௬)
குறுங்கலி - பாலையாழ்த்திறவகையுளொன்று. (தேனு. ௨௫)
கூலம் - அங்காடி. (நகர. ௯௪)
கெமித்தல் - போதல். "கிடைத்தலையெடுத்தயல்கெமித்து" (தேனு. ௮)
கையடை - அடைக்கலம். (நாட். ௫)
கொய்யலில்கொன்றை - தேமல். (கடி மணம். ௩௰)
கொல்லி - மருதயாழ்த்திறம். (தேனு. ௨௫)
கோகம் - சக்கரவாகம். (திக்கு. ௨௪௭)
கோடம் - ஒலி. "குங்குமவாசமுமுரசின் கோடமும்" (மாலை. ௪௨.)
கோரம் - வட்டில். (வாகு. ௨௩)
கோலம் - கருங் குவளை. "கோலமேசுனையெங்கணுங்கோலமே" (குசன். ௭௭)
சத்துருக்கினன் - தசரதராசன் மக்களுள் ஒருவன்; சத்துருவைக்கொல்வோன் என்னும்பொருட்டு.
சதக்கிரது - இந்திரன். நூறுயாகமுடையவன் என்னும்பொருட்டு. (யாக. ௫௮)
சந்திரம் - பொன். (திக்கு. ௪௩)
சம்பரம் - நீர். "சம்பரநளினவாவி" (அயனெழு. ௨௧)
சரளம் - ௧. தேவதாரு, ௨. ஒருமரம், (தேனு. ௩௭)
சரி - வழி. (நகர. ௫௮)
சரு - அவியுணவு. (திருவ. ௪௨)
சல்லியம் - ஆணி. (திக்கு. ௯௫)
சவரன் - வேடன். (சீதை. ௯௮)
சற்சங்கம் - சாதுசங்கம். (தேனு. ௪௰௮)
சன்னு - ஒருமுனி. (அயனெ. ௯௫)
சாதாரி - செவ்வழியாழ்த்திறத்தொன்று. (நாட். ௫௪)
சிங்கல் - குறைதல். (யாக. ௬)
சிறை - மதில். (நகர. ௧௨)
சீது - கள்ளு. "சீதுபருகிக்கடிசிறைக்கொடு." (தேனு. ௭)
சுகம் - கிளி. (தேனு. ௨௬)
சுட்டுதல் - கருதல். (பாயி. ௫)
சும்மை - ஒலி. (தேனு. ௪௰)
சுரபி - காமதேனுவின் கன்று. (குறை. ௬௧)
சுருங்கை - மதகு. (குறை. ௨௪)
சுரை - பசுவின் மடி. (தேனு. ௨௰)
சூதம் - வண்டு. (தசரத. ௨௰)
செண்ணம் - வடிவம். (திக். ௪௬௮)

செங்கீர் - இரத்தம் (தச. கூக)
செம்மல் - பழம்பூ. (ஆற். கஅ)
செய்யல் - சேறு. (தேனு. கஉ)
சேக்கை - தங்குமிடம். (நக. கூகூ)
சேத்து - உவமை. (நாட். சo) அகர வரிசையாகக் கூறும் ஆபிதாநிகம் அறியாது செத்து எனக் குறின் முதலாகக் கொண்டார் பலர்.
சைத்திரரதம் - குபேரன் சோலை. (நகர. கூ)
தடி - க. வயல், (நாட். உக) உ. வில்லு. (யாக. எகூ)
தந்திரகுலம் - கந்தருவகுலம். (அயனெ. ககச)
தருமநூல் - வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்களுள் ஒன்றாகிய ஸ்மிருதி. (தேனு. கூ)
தவ்வல் - குறைதல். (திக்கு. சகூஉ)
தளம் - சாந்து. (நகர. சஅ)
தளம்பல் - அசைதல். (மீட். சருரு)
தாத்திரி - பூமி. (முடி. ககூ)
தாரம் - உச்சவிசை. (நாட். ருச)
தாறு - குலை. (நாட். கூo)
தில்லம் - காடு. (குறை. கூரு)
தீபம் - இரவெரிமரம். (ஆற். கக)
தீயுண்புள் - தீக்குருவி. (மாலை. உக)
துண்டம் - மூக்கு. (தேனு. ருo)
துருமம் - மரம். (இலவ. கூஅ)
தூது - ச. தூதுளங்கொடி. (யாக. சச) உ. கோடாங்கல்லு. (சீதை. உரு)
தெக்கிணநாகம் - பொதியமலை. (நகர எரு) தெக்கிணம் - தெற்கு. நாகம் - மலை.
தெசகண்டன் - இராவணன். (இந்து கூ)
தேவமணி - குதிரையின் கழுத்திலுள்ள ஒருசுழி. (யாக. ரு)
தைவரல் - தடவல். (ஆற். கஅ)
தொள்ளி - சேறு. (சம்புக. அ)
நடவு - கீறு. (நாட். உக)
நடனியர் - கூத்தியர். (ஆற்று. உo)
நந்தினி - காமதேனுவின் கன்று: மகிழ்விப்பது என்னும் பொருட்டு. (தேனு. கூச)
நீராஞ்சநம் - மங்கலவிஷயத்திலே தீபம் முதலியனகொண்டு செய்யப்படும் ஒரு கிரியை. (மீட்சி. கக்அ)
நீன்மணி - நீலரத்தினம். "மின்னுகுடபத்திர நீன்மணியும்" (அரசி. க)
நைவளம் - குறிஞ்சியாழ்த்திறம். (குச. எஅ)
பஃறி - தோணி. (நாட். ருக)
பகல் - க. நுகத்தின் நடுவாணி. (நாட். கஉ) உ. சூரியன். (நகர. ச)
பதகம் - பறவை. (நகர, உஎ)
பதவை - வழி. (திக்கு. உoரு)
பயம் - பால். (தேனு. கக)
பரிமுகவோடம் - குதிரைமுக வோடம். (வாகு. கூகூ)
பரிதியங்குடிங்கு - சக்கரவாகப்புள். (நாட். சo)
பல்லம் - அப்பு. (யாச. எo)
பல்லாண்டு - சோபநம். (தேனு. ●)
பன்னிரண்டிராசமண்டலம் - பன்னிரண்டு இராசகூட்டம். அவர்; பகைவன், நண்பன், பகைவனுக்கு நண்பன், நண்பனுக்கு நண்பன், பகைவன் நண்பனுக்கு நண்பன், பின்பக்கசத்துரு, தன்தேசத்தை மேற்கொள்ளுஞ் சத்துரு, ஆசார சேனை, ஆக்கிராந்தசேனை. மத்தியமன், உதாசினன், வெற்றிபெற விரும்புவோன் என்பவர்கள் "என்றும்பன்னிரண்டிராச மண்டலங்கட்கு மிறையாய்" (தசரத. கக)
பாலகாப்பியம் - யானையிலக்கணங்களை விளக்கிப் பாலகாவிய முனிவராற் செய்யப்பட்ட ஒருநூல். (மாலை. கூச)
புட்கலாவர்த்தம - பொன்மழைபெய்யுமேகம். (நகர. சகூ)

புலித்தானையன் - சிவன். (திக்கு. ௯௯) புலித்தோலையுடையாகக்கொண்டவன் என்னும் பொருட்டு.
புள் - க. வண்டு, உ. வஞ்சகம். (நாட். அ)
பூரியம் - பொன். (அயனெ. கசுடு)
பொற்றை - சிறுமலை. (திக்கு. க௯௭)
மத்தன் மாதுலன் - இமயமலை. (ஆற். கஉ) உமாதேவி இமயமலைக்கு மகளாய் வளர்ந்து சிவபிரானுல் விவாகஞ் செய்யப்பட்டதுபற்றி வந்த பெயர்.
மயிலை - மீன். (வாகுவல. எ௯)
மருகு - மகரவாழை. (குசன். எ௪)
மறுகால் - மறுதரம். (குசன். க0எ)
மா - நிலம். (நாட். ௫௯)
மாநதண்டம் - அளவுகோல். (திக்கு கச௮)
மாலை - தன்மை. "பொய்த்தமாலையர்க்கருள்செயாப்பூமகள்" (நாட். கடு)
முழுமணி - மாணிக்கம். (நாட். சடு)
யாகம் - வாகாம். (திக்கு. க0)
யாப்பு - கட்டு. (தேனு. ச௯)
யூபம் - யாகத்தூண். (தேனு. உ௯)
வடகம் - அத்தவாளம். (குச. உ௯)
வண்டு - வளையல். (திக். ச௯)
வரிக்கடை - வண்டு. (குஹற. உக)
வல்லி - விலங்கு. (இரகு. சஎ)
வாலகிலர் - புலத்தியன் மகளாகிய சந்ததிக்குங் கிரதுவுக்கும் பிறந்த பிள்ளைகள். (இலவண. ௩உ) வாலகில்யர் எபன்து யகாரமெய்கெட்டு வாலகிலர் என்றாயிற்று.
விகசிதம் - மலர்தல். (அர. ச௯)
விகலம் - குறைவு. (மீட். ௯0)
விடதரம் - பாம்பு. (திக்கு. ௪உஉ)
விபுலை - பூமி. (திக்கு. கஉ௮)
விவிதம் - பலவிதம். (வாகு. ௯டு)
விளாகம் - போர்க்களம். "மேயதந்தவிளாகவளாகமே" (திக்கு. க௮௪)
வேணு - வில்லு. (மீட்சி. ௬டு)
வேலி - மதில். (இரகுவுற். சஉ)
வைதர்ப்பி - இந்துமதி. இது விதர்ப்பராசன் மகளெனப் பொருள்படும் ஒருதத்திதம். "உதிக்கினும் வைதர்ப்பியோங்கு வாண்முக" (கடிமச0)

அருந்தொடர்ப்பொருள்கோள்.

பாயிரம்.

கற்குழி தொட்டு உள் அப்பு உண - கல்லிலே குழியைத்தோண்டி உள்ளேயுள்ள நீரை உண்ண. (டு)
எல் தயங்கும் இனன் - பகலிலே விளக்குஞ் சூரியன். (எ)

—o—

ஆற்றுப்படலம்.

தார் தலை மரவம் - பூவைத் தலையிலுடைய கடப்பமாம். (ச0)
தலைப்படி உடல் கொண்டு - தலைாள் எவ்வளவோ அவ்வளவு உடல்களையுங் கொண்டு. (சஉ)
பச்சை விண்டு - பச்சைமூங்கில், பச்சைநிறத்தையுடைய விட்டுணு. (க௪)
நின்றவோ திரிந்த ஆயின் நிலையிலாத தரிப்பவோ - நிலையாக நின்றன வல்ல. ஆராயுமிடத்து இயங்கியற்பொருள் தரித்துநிற்குமா. (உஉ)

—o—

நாட்டுப்படலம்.

நறவளிப்பன சோலை - தேனைக்கொடுப்பனவாகிய சோலை. (௯)

தேசிகவளை அரிமணிக் கதிர் இகல - பொன்வளையலின் ஒலி மரகதரத்தினத்தின் ஒளியை நிகர்க்க. (கசு)

தத்தம் அன்ன சொல்லியர் புரி ஒரொரு தொழிலிற் பைத்த செவ்வியிற் பொலிவன மரம் பத்தும் - பெண்கள் செய்யும் ஒவ்வொரு தொழிலினாலே மரங்கள் பத்தும் பசுமை யுடையனவாய் மலரும் காலத்திற்போலப் பொலிந்து மலர்வன. இதனை "ஏடவிழ் மகிழ் சுவைக்க வெழிற்பாலே நண்பு கூடப் - பாடலங்கிந்திக்கத்தேம்படி முல்லை நகைக்கப்புன்னை - யாடநீள் குராவணைக்கவசோகுதைத்திடவாசந்தி - பாடமாப்பார்க்கவார்சண்பகநிழற்படத்தளிர்க்கும்" என்னும் நிகண்டினாலுணர்க. (உசு)

நிலமடந்தை தன் மக மகவினை - பூமிதேவியின் மகவாகிய பயிரின் மகவாயுள்ள கதிரினை. (௩க)

உழு தொழில் அகம் அற - உழவுத் தொழிலாகிய பாவம் நீங்க. (௩உ)

நத்து யானம் செய - சங்குகள் செல்ல. (௪க)

அல் நனி கடத்து - இராக்காலத்தில் மிகுதியாகக் காட்டில். (௪௪)

நவ கரு விளைப்ப ஏட்டை வயற்கு அயல் - புதிய கருவினை உண்டாக்க இதழை வயலின் பக்கத்தே. (௫௫)

—o—

நகரப்படலம்.

தற் பவ ஆதாரம் - தன்னுடைய அவதாரத்துக்கு இடம். (உ)

அல் அது அம் சுடர் பகல் பட - இராக்காலமும் அழகிய ஒளியையுடைய பகற்காலமாக. (௪)

புள் தேதிய கள் தார் பொதி - வண்டினால் அறியப்பட்ட தேன் பொருந்திய மாலையையுடைய பொதி. (உஅ)

அறை செய் கன்னல் - துண்டமாக அறுக்கப்பட்ட கரும்பு. (எஉ)

—o—

அரசியற்படலம்.

பர நிருப இரசனி - வேற்றரசாகிய இரா. (ரு)

—o—

குறைகூறுபடலம்.

புரி நிலம் இறந்து - மருதநிலத்தைக் கடந்து. (உஎ)

எச்சு நாட்டம் கொடு - குறைவாகிய பார்வையைக்கொண்டு. (உகூ)

வந்திட்டு ஆங்கு - வந்தாற் போல. (கூஉ)

சாக மூல பல ஆதி - கீரை கிழங்கு பழம் முதலிய. (எ0)

—o—

தேனுவந்தனைப்படலம்.

நைவு இடும் அகத் தொகை - கெடுதலைச்செய்யும் பாவக்கூட்டம். (கஉ)

அழி பலத்தின் செய்யல் - அழிந்த பழத்தினாலாகிய சேறு. (உஉ)

ஈ உலவையின் ஓப்பி - ஈக்களைச் சிறு கிளைகளால் ஓட்டி. (௩ரு)

இன்று எய்வது ஆயினும் - இப்போது பிரயோகிப்பினும். (அ0)

நன்று உகா - நன்மையை உகுத்து. (௯க)

—o—

இரகுவுற்பத்திப்படலம்.

அற் பொழுது ஆயினன் இல் - இராக்காலத்து சமமாயினனில்லை. (சஉ)

எத்தினத்தும் சேரும் சந்திரன் - இருபத்தேழு நட்சத்திரங்களோடுங் கூடிய சந்திரன். தினம் - நட்சத்திரம். (ருச)

—o—

யாகப்படலம்.

ஆனின் ஈர்ம் புனல் - பசுவினுடைய குளிர்ந்த நீர்; கோசலம் என்றவாறு. (சகூ)

கல் ஒன்று கடலதாகக் கண்டவன் - மலையொன்றைக் கடலிடத்தே விழும்படி செய்தவன்; மைநாக மலையைக் கடலில் விழுத்திய இந்திரன் என்றவாறு. (கூரு)

அரவம் நாணி விசித்த மா மேரு - வாசுகி என்னுஞ் சர்ப்பநாணி பூட்டப்பட்ட மகா மேரு. (அஎ)

—o—

திக்குவிசயப்படலம்.

நோக உள் தாள் கெட - நோவடையவும் உண்முயற்சி கெடவும். (உகூ)

மெய்த்த அநுபவம் - மெச்சி அநுபவத்தை. (அகூ)

மொய் தலைதனில் - போர்க்களத்தில் (அஎ)

புகலில் நல் நிலமுழுவதும் - புகுதலால் நல்ல பூமி முழுவதும் (அஅ)

பவ வினை ஒழியாத ஊறல் - பிறவியில் வினையொழியாது தோன்றுதல் (கூo)

மை அறல் - கருமணல்.

மை அறல் - மேகம் நீரை. (கூரு)

பூட்டியவா சினை கழற்றி - பூட்டப்பட்ட படி உறுப்புக்களினின்றுங் கழற்றி. (உருரு)

—o—

அயனெழுச்சிப்படலம்.

மாராட்டத்த மா பல பம்பு சேனை - கூந்தலிலே வண்டுகள் பல பரந்த பெண்கள், மராட்டத்து மா - மராட்டதேசக்குதிரை. (உகூ)

சன்னு விட்டு எழுகதி - சன்னு என்னும் முனிவரா லுண்ணப்பட்டுக் காதின்வழியால் விடப்பட்டெழுந்த கங்காநதி. (கூரு)

மா தபத்து இரவியை - பெரிய சுடு தலையுடைய சூரியனை. (எச)

—o—

மாலையிட்டுப்படலம்.

மைந்தருக்கு இடம் பெறு வையம் - ஆடவருக்குக் கொடுத்தலைப் பெறு பூமி. (கூ)

மா சிலாவருண வண் படாத்த - பெருமையாகிய இந்திர விற்போலும் பல நிறத்தையுடைய கம்பளத்தையுடைய. (சகூ)

பூந்தாது ஓர் வட்டம் சுடர் செய்ய - மகரந்தம் ஒரு வட்டத்தைப் பரிவேடம் போலச்செய்ய. (அச)

—o—

கடிமணப்படலம்.

பூ மனும் மண் - அழகுபொருந்திய பூமி. (கூஉ)

மூரி வாகு பிறங்கல் - வலிய புயமாகிய மலை. (கூச)

—o—

மீட்சிப்படலம்.

கரம் ஓராயிரம் உந்தையை - கைகள் ஆயிரமுள்ள உன் வமிசத்து முன்னோனாகிய கார்த்த வீரியார்ச்சுனனை. (அரு)

வெய்யோன் கைப்பட்டு கழிந்த - சூரியனிடத்தே சேர்ந்து நீங்கிய. (கககூ)

—o—

இரகுநதியுறுபடலம்.

மூன்று சித்திப் பலம் - மந்திரசத்தி, பிரபுசத்தி, உற்சாகசத்தி என்னும் மூன்றினாலும் அடைந்த மந்திரசித்தி, பிரபுசித்தி, உற்சாகசித்தி என்னும் மூன்று சித்திகளின் பயன். (எ)

அங்கம் ஓர் ஏழு - சுவாமி, அமாத்தியன், இராட்டிரம், துர்க்கம், கோஷம், பலம், சுகிருத்து என்னும் ஏழு அங்கங்கள். சுவாமி — தலைவன். சுவாமி ஒழிந்த ஆறனையும் "படைகுடி" என்னுங் குறளுரையிலே பரிமேலழகர் முறையே அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பர். (௪௦)

சந்தி முற் குணங்கள் ஆறு - சந்தி, விக்கிரகம், யாநம், ஆசநம், துவைதீபாவம், ஆச்சிரயம் என்னும் அரசர்க்குரிய ஆறு குணங்கள்: அவற்றுள்; சந்தி - நட்பாக்கல். விக்கிரகம் - விரோதம். யாநம் - பகைவன்மேற் செல்லல். ஆசநம் - காலம்பார்த்திருத்தல். துவைதீபாவம் - பிரித்தல். ஆச்சிரயம் - பகையை வெல்லுதற்கு வேறொருவனை யடைதல். இவற்றுட் சில வேறாகவும் வழங்கப்படும். (௬௯)

—o—

இந்துமதிபிரப்புநீங்கு.

தேசம் முந்து இரதன் - தேசம் என்னுஞ் சொல் முன் வைக்கப்பட்ட இரதன்; தசரதன் என்றவாறு. தசரதன் - பத்துத்திக்கினுஞ் செல்லுந் தேருடையவன். .(௬)

ஆகு அன்னத்தான் அன்ன - பிரமாவையொத்த. (௬௮)

—o—

திருவவதாரப்படலம்.

கல் திரி முனம் - மந்தரமலையினாலே கடைதற்கு முன்னம். (௨)

தோகை பெயர் பெற்றுள நாடி - மயிலின் பெயர் பெற்றுள்ள நாட்டையுடையவள்; மயிலின் பெயர் என்றது கேகயம் என்னும் மொழியை. கேகயநாடுடையவளாகிய கைகேசி என்றவாறு. (௪௮)

—o—

சிதை வனம்புகுபடலம்.

மதியம் விண் ஆறு ஒருவி நல் உடுவின் யோகம் விடுத்து - சந்திரன் ஆகாயவழியை விடுத்து நட்சத்திரங்களோடு கூடுதலையும் விட்டு. (௧௯௧)

இருதில் தை திங்கள் திங்கள் - இருதுக்களுள்ளே தைம்மாசத்துச் சந்திரன். (௪௫)

—o—

இலவணன்வதைப்படலம்.

கும்பசம்பவன் - அகத்தியன். (௧௨)

யாகத்து ஒழி பலன் - தக்கன் யாகத்திலே நீங்கிய பல்லினையுடைய சூரியன் (௨௧)

புத்தப் புதிய - மிகப்புதிய. (௪௦)

—o—

அவதாரநீங்குபடலம்.

உட்படு சிந்தையி னுதிக்குவான் - மன் மதன். (௧௯)

—o—

குசனயோத்தி.

துணைவராவார் எழுவர் - லவனும் மற்றைய பரதன் முதலியோர் பிள்ளைகளுமாகிய சகோதரரெழுவர். (௧௯)

ஏதில்யாவும் - அயலெல்லாம். (௪௫)

பொகில் பிடித்து - அரும்பி. (௬௯)

—o—

வாகுவலயப்படலம்.

பணிலநாமவஞ்சன் - பஞ்சசனன். (௮௯)

—o—

குலமுறைகிளத்து.

விடதரம் ஆதரம் - பாம்பினைற்றரிக்கப் படுதலை யுடைய. (௧)

கட தராதரம் நிகர் - குடத்தையும் மலையையும் ஒத்த. (௧)

மருங்குள் நத்திழி - பக்கத்திலே ச ங்குகள் இறங்கு கின்ற. (௬)

போர் யாத்திரன் - போருக்குச் செ ல்வோன். (௭)

ஆகம் கந்துகம் அடித்திடும் - உடம் பாகிய பந்தினை அடிக்கின்ற. ௧௨)

வயல் நத்து அன்னமார் - வயலிலே சங்கும் அன்னப் பறவையும் பொ ருந்திய. (௧௪)

பொன் இலம் கமழ் பொய்கை - இ லக் குமியின் வீடாகிய தாமரை ப்பூப் பரிமளிக்கின்ற வாவி. (௧௫)

உப்பு தரும் ஓதம் நீர் - உப்பினைத் தருகின்ற கடலின் நீர் (௧௭)

திர் ஆணக் கலா மனத்தரை - சிற ப்படையும் படி படித்தறியாத ம னமுடையவரை. (௧௮)

கார் அண் அக் கல் ஆம் உதயமுற்று - மேகங்கள் படிகின்ற அந்த மலை யாகிய உதயத்தை அடைந்து (௧௯)

தருவ தந்தியும் மணியும் ஆம் கை - கொடுக்கப்படுவன யானையும் இர த்தினமு மாகப்பெற்ற கைகளையு டைய. (௨௬)

உரு அது அந்தி ஒண் பிறை என - உருவமானது அந்திகாலத்துள்ள ஒள்ளிய பிறை என்று. (௨௬)

—o—

முற்றிற்று.

—o—

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩.	௩௪.	அருப்பியது	அனுப்பியது.
௪.	௨௦.	தளர்த்தன.	வளர்த்தன.
௧௧.	௨௦.	வளங்கினர்	வணங்கினர்
௧௭.	௩௨.	வோவி	வேர்வி
௨௧.	௪.	புண்டரித்தடை	புண்டரிகத்தடை.
௨௮.	௨.	ஒலி.	ஒளி.